thinaboomi.com

சென்னை, வியாழன், மார்ச் 27, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**தென் கொரியா காட்டுத்தீ; உயிரிழப்பு 24 ஆக உயர்வு: 27 ஆயிரம் பேர் வெளியேற்றம்**

...2-ம் பக்கம்

**சென்னையில் செயின் பறிப்பு சம்பவம்: 3-வது நபர் ஆந்திராவில் கைது**

...3-ம் பக்கம்

**அகமதாபாத் மைதானத்தில் பஞ்சாப் கிங்ஸ் ஐ.பி.எல்.அணி புதிய வரலாற்று சாதனை**

...6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் பாரதி உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி அவரது இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

### ஊரக பகுதிகளில் ரூ.800 கோடியில் உயர்மட்ட பாலங்கள்:

# கிராமங்களில் ரூ.3,150 கோடியில் 1,500 சமுதாய சுகாதார வளாகங்கள்

## சட்டசபையில் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மார்ச் 27-

**கிராமப்புறங்களில் பொதுமக்கள் அதிகமாக கூடம் இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் ரூ.3,150 கோடி மதிப்பீட்டில் சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டப்படும் என்றும் ஊரக பகுதிகளில் ரூ.800 கோடி செலவில் உயர் மட்ட பாலங்கள் அமைக்கப்படும் என்றும் சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவித்தார். மேலும் மக்கள் நல பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாக முதல்வருடன் பேசி விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.**

**கலைஞர் கனவு இல்லம்....**

தமிழக சட்டப்பேரவையில் புதன்கிழமை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேசினர். அதற்கு அத்துறையின் அமைச்சர் இ.பெரியசாமி பதிலளித்துப் பேசியதாவது: கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் ஒரு லட்சத்து 25 ஆயிரம் வீடுகள் கட்டப்படும். கடந்த 4 ஆண்டுகளில் ரூ,1,122 கோடி செலவில் 3,766 அரசு பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. அதேபோதல் முதல்வரின் கிராமச் சாலை திட்டத்தில் ரூ.4 ஆயிரம் கோடி செலவில் 10,545 கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதமர் சாலை மேம்பாட்டு திட்டத்தில் 5 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சாலைகள் போடப்பட்டுள்ளன.

**20 ஆயிரம் வீடுகள்....**

கடந்த 4 ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.4,200 கோடி செலவிடப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்துக்கு ரூ.450 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் 20 ஆயிரம் வீடுகள் பழுதுபார்க்கப்பட்டு அவை புது வீடுகளாக புதுப்பிக்கப்பட்டுள்ளன. குடிநீர் திட்டங்களை பொருத்தவரையில் புதிதாக 4600 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் ஒரு கோடியே 25 லட்சம் மக்கள் வசிக்கின்றனர்.அவர்களில் ஒரு கோடியே 10 லட்சம் பேருக்கு குடிநீர் வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன.

**பணியாளர்கள் சம்பளம்**

பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம், மாநில அரசின் பங்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம். தற்போதைய விலைவாசிக்கு ஏற்ப மத்திய அரசு தனது பங்களிப் புத்தொகைய உயர்த்தி தர வேண்டும். ஊரக பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்கும் பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊராட்சிகளை அருகே இருக்கும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுடன் இணைப்பது தொடர்பாக ஆராய ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு மாவட்ட ஆட்சியர்களின் கருத்துருக்களை பெற்று ஊராட்சிகள் இணைப்பு தொடர்பாக முடிவெடுக்கும். மக்கள் நல பணியாளர்களின் சம்பளத்தை உயர்த்துவது தொடர்பாக முதல்வருடன் பேசி விரைவில் முடிவெடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

**500 ரேஷன் கடைகள்**

பின்னர் அமைச்சர் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு: கிராமப்புற பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை

(கடைசி பக்கம் பார்க்க)

### பாம்பன் புதிய ரெயில் பாலம் திறப்பு:

# வரும் 6-ம் தேதி தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்பு

சென்னை, மார்ச் 27-

**பாம்பன் புதிய ரெயில் பாலத்தை திறந்து வைக்க பிரதமர் மோடி அடுத்த மாதம் 6-ந்தேதி தமிழகம் வருகிறார். இந்த நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.**

பழைய பாம்பன் பாலம் 1914-ம் ஆண்டு திறக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் வழியே நடைபெற்ற போக்குவரத்தின் வாயிலாக ராமேசுவரம் வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்தது. கடலுக்கு நடுவில் இருந்த பழைய பாலத்தில் 40 கிலோ மீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் ரெயில்கள் இயக்கப்பட்டது.

இதற்கிடையே, பாம்பன் ரெயில் பாலம் 110 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், கடல் அரிப்பின் காரணமாக பாலத்தின் பல இடங்களில் உறுதித்தன்மை குறைந்தது. கப்பல் போக்குவரத்துக்காக பயன்படும் 'தூக்கு பாலத்தில்' அவ்வப்போது பழுதும் ஏற்பட்டது. எனவே, பாதுகாப்பு கருதி இப்பாலத்தில் 2022-ம் ஆண்டு டிசம்பர் 22-ந்தேதியுடன் ரெயில் சேவை நிறுத்தப்பட்டது.

பின்னர், பழைய பாம்பன் ரெயில் பாலம் அருகே புதிய ரெயில் பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியது. ரூ.550 கோடி மதிப்பீட்டில் புதிய ரெயில் பாலம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கியது. 2 ஆயிரத்து 78 மீட்டர் நீளத்திற்கு (2.1 கிலோ மீட்டர் தூரம்) கட்டப்பட்டு வந்தது.

இதற்கிடையே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஏ.எம்.சவுத்ரி புதிய ரெயில்வே பாலத்தை ஆய்வு செய்தார். அப்போது, ஒருசில குறைகளை சுட்டிக்காட்டினார். பாதுகாப்பு கமிஷனர் சுட்டிக்காட்டிய குறைகள் சரி செய்யப்பட்டது.

இதையடுத்து, புதிய ரெயில் பாலம் கட்டுமானப் பணி கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவடைந்து சோதனை ஓட்டமும் நடத்தப்பட்டது. பின்னர், பிப்ரவரி மாதத்தில் இந்த பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்க திட்டமிடப்பட்டது. ஆனால், திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் ஏதும் நடைபெறவில்லை.

ரெயில்வே பாலப் பணிகள் முடிந்து 3 மாதங்கள் ஆகியும் திறந்துவைக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டது. குறிப்பாக, பாம்பன் புதிய ரெயில்வே பாலம் மத்திய அரசின் கனவு திட்டம் என்பதால் அதை பிரதமர் மோடி மட்டுமே திறந்து வைப்பார் எனவும் ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்து வந்தனர்.

கடந்த 23-ம் தேதி தெற்கு ரெயில்வே கூடுதல் பொது மேலாளர் கவுசல் கிஷோர் தலைமையில், ரெயில்வே உயர் அதிகாரிகள் பாம்பன் பாலத்தை ஆய்வு செய்தனர்.

இந்த நிலையில், பாம்பன் புதிய ரெயில் பாலத்தை திறந்து வைக்க பிரதமர் மோடி ஏப்ரல் மாதம் 6-ந்தேதி தமிழகம் வருகிறார்.

முன்னதாக 5-ம் தேதி இலங்கை செல்லும் பிரதமர் மோடி அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அங்கிருந்து நேரடியாக பாம்பன் வருகிறார். 6-ந் தேதி பாம்பன் புதிய ரெயில் பாலத்தை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

பாம்பன் ரெயில்வே பாலம் திறப்பு விழாவில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என்.ரவி, மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்விணி வைஷ்ணவ் மற்றும் தமிழக எம்.பி.க்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், பா.ஜனதா மூத்த தலைவர்கள், தொண்டர்கள் என பலரும் கலந்துகொள்ள உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை தெற்கு ரெயில்வே செய்து வருகிறது.

இதேபோல, பாம்பன் புதிய பாலம் திறப்புக்கு பின்னர் பிரதமர் மோடி, ராமேசுவரத்தில் உள்ள ராமநாதசாமி கோவிலில் தரிசனம் செய்கிறார். அதன்பிறகு பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்கிறார்.

இதைத் தொடர்ந்து, மதுரை விமான நிலையம் சென்று அங்கிருந்து டெல்லி செல்ல உள்ளதாக பா.ஜனதா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# புதிதாக 72 காவல் நிலையங்கள் உருவாக்கம்

## சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு



சென்னை, மார்ச் 27-

**புதியதாக 72 காவல் நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மேலும், புதிய காவல் நிலையம், தீயணைப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (மார்ச் 26) சட்டப் பேரவையில் காவல்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்து பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவிலில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் கட்டுவதற்கு சர்வே எண். 302/1, ஆவுடையார் கோவில் வட்டம் என்ற இடத்தில், அரசு புஞ்சை தரிசு நிலம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறைக்கு 1.8.2019 அன்று நிலமாற்றம் செய்யப்பட்டு இந்த காவல் நிலையத்திற்கு சொந்தமாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் 27.1.2025 தேதியிட்ட அரசாணை (நிலை) எண். 43-இன் படி ரூ.2.59 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டிடம் கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கழகத்தால் வருகின்ற மே மாதம் தொடங்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரிக்குள் கட்டி முடிக்கப்படும்.

சட்டபேரவை உறுப்பினர் கணபதி கேள்வி:

மதுரவாயல் சட்டப்பேரவைத் தொகுதியில் அயம்பாக்கம் ஊராட்சி உள்ளது. இந்த ஊராட்சியில் 1 லட்சத்து 16 ஆயிரம் மக்கள் தொகை கொண்டது. இந்த ஊராட்சியில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மைய அலுவலகமும், மத்திய போதை தடுப்பு தலைமையகமும் மற்றும் மத்திய அரசின் உணவுக் கழகத்தின் தலைமையகம், ஆசியாவிலேயே மிகப் பெரிய வீட்டு வசதி திட்டமும் இங்குதான் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏறக்குறைய இந்த 1 லட்சத்து 15 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட இந்த ஊராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா? பேரவைத் தலைவர் மூலமாக, முதல்வரை கேட்டு அமைகிறேன். நன்றி.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்:

சென்னை புறநகர் மாவட்டம் அயம்பாக்கம் பகுதியைச் சார்ந்த புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க

(கடைசி பக்கம் பார்க்க)

### ஆன்லைன் விளையாட்டு தளங்கள் குறித்து

# மாநில அரசுகளே சட்டம் இயற்றலாம்: மத்திய அரசு

புதுடெல்லி, மார்ச் 27-

**ஆன்லைன் விளையாட்டு தளங்கள் தொடர்பாக மாநில அரசுகளே சட்டம் இயற்றலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

பாராளுமன்றத்தின் மக்களவையில் தி.மு.க. எம்.பி. தயாநிதி மாறன் கேள்வி நேரத்தில் நேற்று பேசும் போது, ஆன்லைன் விளையாட்டுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பில் இருந்து மத்திய அரசு விலகி இருக்கிறதா? என்று கேட்டார். தொடர்ந்து அவர், அனைத்து ஆன்லைன் விளையாட்டுகளுக்கான தளங்களையும் தடை செய்வதற்கு மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? என்றும் கேட்டார்.

இதற்கு மத்திய தகவல் தொழில்நுட்ப துறையின் மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்து பேசும்போது, மத்திய அரசுக்கு கட்டளையிடும் உரிமை எதுவும் மாறனுக்கு கிடையாது என கூறியதுடன், அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்ட மத்திய கட்டமைப்பின்படியே நாடு இயங்குகிறது என கூறினார். அதனால், மத்திய கட்டமைப்பை பற்றி தயவு செய்து படித்து பார்க்கவும். நாட்டின் மத்திய கட்டமைப்பை மதிக்கும்படியும், அரசியலமைப்பை பாதுகாக்கும்படியும் உறுப்பினரை கேட்டு கொள்கிறேன் என்றும் அவர் பேசினார்.

இதேபோன்று மற்றொரு துணைநிலை கேள்விக்கு பதிலளித்து பேசும்போது, மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால், பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியன பற்றிய சட்டங்கள், மாநிலங்களுக்கான விசயங்கள் ஆகும் என கூறினார். புகார் அடிப்படையில் முன்பே 1,410 ஆன்லைன் விளையாட்டு தளங்கள் தடை செய்யப்பட்டு விட்டன என்றும் அவையில் அவர் தகவலாக தெரிவித்து உள்ளார். புதிய குற்றவியல் சட்டத்தின் 112-ம் பிரிவை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கோடையில் 22 ஆயிரம் மெகாவாட் மின் தேவை

## அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்

சென்னை, மார்ச் 27-

**கோடைக்காலத்தில் 22,000 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும் என்று தமிழக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.**

சென்னையில் மின்சாரத் துறை தலைமை அலுவலகத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அவர் பேசுகையில், "கோடைக் காலத்தில் 22,000 மெகாவாட் மின்சாரம் தேவைப்படும் நிலை ஏற்படலாம். எந்தத் தடையும் இல்லாமல் சீரான மின்விநியோகம் வழங்குவதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் 78,000 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மின்சாரத் துறையில் காலியாகவுள்ள அவசியமான பணியிடங்கள் விரைவில் நிரப்படும். 2030-க்குள் மின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல், மே மாதத்திற்கு கூடுதலாக தேவைப்படும் மின்சாரத்திற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது" என்றார்.

### சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில்

# அலகாபாத் ஐகோர்ட் தீர்ப்பிற்கு சுப்ரீம் கோர்ட் கடும் கண்டனம்

## தீர்ப்பிற்கும் இடைக்கால தடைவிதிப்பு

புதுடெல்லி, மார்ச் 27-


**அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு மனதிற்கு வருத்தத்தை அளிக்கிறது என்று சுப்ரீம் கோர்ட்டு கூறியுள்ளது. மேலும் தீர்ப்பிற்கும் இடைக்கால தடை விதித்துள்ளது.**

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி, சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் சமீபத்தில் அளித்த தீர்ப்பு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதாவது பெண்ணின் மார்பகத்தை பிடிப்பது உடைகளை கிழிப்பது பாலியல் வன்கொடுமை குற்றம் அல்ல என தீர்ப்பு வழங்கியிருந்தார். இந்நிலையில் அலகாபாத் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புக்கு சுப்ரீம் கோர்ட் தடை விதித்துள்ளது.

அலகாபாத் நீதிபதி வழங்கிய சர்ச்சை தீர்ப்பை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த சுப்ரீம் கோர்ட் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. போதிய சென்சிட்டிவிட்டி இல்லாமல் எழுதப்பட்ட தீர்ப்பு எனவும் நாட்டின் தீவிரமான பிரச்சினைகள் முற்றிலும் உணர்வு பூர்வமற்ற வகையில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி இப்படி ஒரு தீர்ப்பை எழுதி இருப்பதாகவும் சிறுமி பாதிக்கப்பட்ட விவகாரம் மனித தன்மையற்ற வகையில் அணுகப்பட்டுள்ளதாகவும் சுப்ரீம் கோர்ட் கண்டனம் தெரிவித்துள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் கடினமான வார்த்தையை பயன்படுத்தியதற்கு வருந்துவதாகவும் சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு நான்கு மாதங்கள் கழித்து இப்படி ஒரு தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது என சுப்ரீம் கோர்ட் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த விவகாரத்தில் பதிலளிக்க மத்திய அரசுக்கும், உத்தர பிரதேச அரசுக்கும் நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE -728.69 பாயின்ட் 77,288.50

NSE -181.80 பாயின்ட் 23,486.85




**தங்கம்** 1 சவரன் ₹65,560 1 கிராம் ₹8,195



**வெள்ளி** 1 கிலோ ₹111,000 1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.66

**பெட்ரோல்** ₹100.75 **டீசல்** ₹92.34



## தென் கொரியா காட்டுத்தீ: பலி 24 ஆக உயர்வு; 27,000 பேர் வெளியேற்றம்

**தென்கொரியா, மார்ச் 27-**



தென் கொரியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயில் இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென் கொரியா நாட்டின் தெற்குப் பகுதிகளில் நிலவும் வறண்ட வானிலையாலும் மற்றும் வீசும் பலத்த காற்றினாலும் தொடர்ந்து பரவும் காட்டுத் தீயினால் பலியானவர்களின் எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த அந்நாட்டு தீயணைப்பு வீரர்கள் போராடி வரும் நிலையில் அன்டோங் நகரம் மற்றும் பிற தென்கிழக்கு நகரங்களில் உள்ள சுமார் 27,000 பேர் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், 9,000 தீயணைப்பு வீரர்கள், 130-க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் அங்கு தொடர்ந்து பரவும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் 26 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய தீயணைப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. முன்னதாக, தென் கொரியாவின் உய்சோங் நகரத்தின் சியோங்சாங் கவுன்டியிலுள்ள ஒரு சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 2,600 கைதிகளை இடமாற்றும் பணியை அதிகாரிகள் தீவிரமாக மேற்கொண்டிருந்தனர். மேலும், உய்சோங் மலைப்பகுதியில் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகாப்டர் ஒன்று விபத்துக்குள்ளாகி அதன் விமானி பலியானதாக தீயணைப்பு அதிகாரிகள் கூறியது குறிப்பிடத்தக்கது.

## இளம்பெண் ஆணவக்கொலை: பாக்.கில் தந்தை - அண்ணனுக்கு தூக்கு

**இஸ்லாமாபாத், மார்ச் 27-**

பாகிஸ்தானில் இளம்பெண் ஆணவக்கொலையில் தந்தை, அண்ணனுக்கு தூக்கு தண்டனை கோர்ட்டு விதித்து உத்தரவிட்டது.

பாகிஸ்தானின் கிழக்கு பஞ்சாப் மாகாணம் டோபா டேக் சிங் நகரைச் சேர்ந்த இளம்பெண் மரியா பீபி. கடந்த ஆண்டு அவரது தந்தை மற்றும் அண்ணன் ஆகியோர் சேர்ந்து மரியாவை சரமாரியாக தாக்கினர். இதில் படுகாயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே இறந்தார். ஆனால் இதுகுறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படாமல் இருந்தது.

இதற்கிடையே மரியா பீபியை குடும்பத்தினர் சேர்ந்து தாக்கிய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. இதனையடுத்து ஆணவக்கொலை செய்ததாக போலீசார் அவர்களை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கின் விசாரணையில் அவர்கள் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் இருவருக்கும் தூக்கு தண்டனை வழங்கி பாகிஸ்தான் கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

## சாலை விபத்தில் உயிரிழந்த காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 27-**

சாலை விபத்தில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதி வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்,

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், விழுப்புரம் மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த தமிழ்ச்செல்வன் (வயது 57) என்பவர் 13.3.2025 அன்று பணியின் நிமித்தமாக இரு சக்கர வாகனத்தில் மாவட்ட காவல் அலுவலகம் எதிரில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நான்கு சக்கர வாகனம் மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 24.3.2025 அன்று மாலை உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் தமிழ்ச்செல்வன் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழ்ச்செல்வன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு 30 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். என தெரிவிக்கப்பட்டுள்ளது .

## பாக்.கில் ரயில் கடத்தல்: 4 பயங்கரவாதிகள் கைது

**இஸ்லாமாபாத்,மார்ச் 27-**

பாகிஸ்தானில் ரெயிலை கடத்திய 4 பயங்கரவாதிகள் போலீசார் கைது செய்தனர்.

பாகிஸ்தானின் தென் மேற்கு பகுதியில் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லையில் அமைந்துள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் கிளர்ச்சி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த கிளர்ச்சி குழுக்களை சேர்ந்தவர்கள் பலுசிஸ்தானை தனி நாடாக அறிவிக்கக்கோரி அரசுக்கு எதிராக தொடர் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக பாகிஸ்தான் அரசால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட பலுசிஸ்தான் விடுதலை ராணுவம் (பி.எல்.ஏ.) சமீபகாலமாக பல்வேறு பயங்கரவாத தாக்குதல்களை நடத்தி வருகிறது. கடந்த 11-ந்தேதி பாகிஸ்தானின் போலன் மாவட்டத்தில் குடாலார் மற்றும் பிறுகோனேரி நகரங்களுக்கு இடையே சென்று கொண்டிருந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் ரெயிலை பயங்கரவாதிகள் கடத்தினர்.

அந்த ரெயிலில் இருந்த 440 பயணிகளை பயங்கரவாதிகள் பணயக் கைதிகளாக பிடித்து வைத்தனர். அவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவத்தில் 26 பணயக் கைதிகள் உயிரிழந்தனர். அதே சமயம், 33 பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்று, 354 பணயக் கைதிகளை பாதுகாப்பு படையினர் பத்திரமாக மீட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் காவல்துறையின் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், ரெயில் கடத்தல் சம்பவத்தில் பயங்கரவாதிகளுக்கு உதவியாக செயல்பட்ட 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கம் பவுனுக்கு ரூ.80 உயர்வு

**சென்னை, மார்ச் 27-**

சென்னையில் தங்கம் விலை கடந்த மார்ச் 20-ஆம் தேதி 66,480-க்கு விற்பனையாகி புதிய உச்சத்தைத் தொட்ட நிலையில், மார்ச் 21 ஆம் தேதி பவுனுக்கு ரூ. 320 குறைந்து ரூ. 66,160-க்கும், மார்ச் 22 ஆம் தேதி மீண்டும் பவுனுக்கு ரூ. 320 குறைந்து ரூ. 65,840-க்கும், மார்ச் 23-இல் விலை மாற்றமின்றியும் விற்பனையானது. தொடர்ந்து திங்கள்கிழமை தங்கம் விலை பவுனுக்கு ரூ. 120 குறைந்து ரூ. 65,720-க்கும் விற்பனையான நிலையில், செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.30 குறைந்து ரூ. 8,185-க்கும், பவுனுக்கு ரூ.240 குறைந்து ரூ. 65,480-க்கும் விற்பனையானது. கடந்த 5 நாள்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,000 குறைந்தது.

இந்த நிலையில், புதன்கிழமை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.8,195-க்கும், பவுனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.65,560-க்கு விற்பனையானது. வெள்ளி விலை நிலவரம் தொடர்ந்து 3 நாள்களாக எவ்வித மாற்றமுமின்றி கிராம் ரூ. 110-க்கு விற்பனையாகி வந்த வெள்ளி விலையில் புதன்கிழமை மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமுக்கு 10 பைசா குறைந்து ரூ.109.90-க்கும், ஒரு கிலோ ரூ.1,09,000-க்கும் விற்பனையானது.

## திபெத்தில் நிலநடுக்கம்

**பீஜிங், மார்ச் 27-**

திபெத்தில் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆக பதிவானதாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத் உள்ளது. இமயமலையின் வடக்கு பகுதியில் உயரமான இடத்தில் திபெத் அமைந்துள்ளது. திபெத்தில் கடந்த ஜனவரி 7ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்நிலையில், திபெத்தில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 11.39 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

## ஓசூர் அருகே எரிசாராயம் கடத்திய லாரி பறிமுதல் - ஓட்டுநர்கள் கைது

**ஓசூர், மார்ச் 27-**

ஓசூர் அருகே எரிசாராயம் கடத்திய லாரி ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டனர்.

அமலாக்கப் பிரிவு புலனாய்வு துறை மாநிலம் முழுவதும் சட்ட விரோத மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அமலக்கப்பிரிவு புலனாய்வு துறை தமிழகத்தில் போலி மதுபான வர்த்தகத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தை மிகவும் உறுதியாக அமல்படுத்தி வருகிறது. முதன்மையாக போலி மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், எரிசாராயம் கடத்தல்கள், சட்ட விரோதமாக மதுபானம் தயாரிக்கும் கூடங்கள், பிற மாநில மதுபானங்கள் கடத்தல்களை தடுக்க தொடர் கண்காணிப்பு மற்றும் வேட்டைகள் நடத்தி வருகிறது.

அமலாக்கப்பிரிவு புலனாய்வு துறை தற்போது மிக நுணுக்கமான நுண்ணறிவு தகவல்களை சேகரித்து உடனடி மற்றும் தொடர் நடவடிக்கை எடுத்துவருகிறது. சமீபத்தில் கோயம்புத்தூர் மத்திய புலனாய்வு பிரிவு குழுவினரால் கோயம்புத்தூர் சூலூரில் உள்ள ஒரு குடோனில் பதுக்கி வைத்திருந்த 5,145 லிட்டர் எரிசாராயம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் மண்டல மத்திய நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் தலைமையிலான குழு, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தர்கா அருகே ஒரு லாரியை வழிமறித்து சோதனை செய்த போது 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட 215 வெள்ளை நிற கேனில், 7,525 லிட்டர் எரிசாராயம் கடத்திவரப்பட்டத்தை கண்டுபிடித்தனர். லாரி மற்றும் கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, இரண்டு ஓட்டுநர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், இந்த எரிசாராயம் கர்நாடகா மாநிலம் தார்வட்த்திலிருந்து பாலக்காடு கேரளாவுக்கு கடத்திவரப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எரிசாராயம் கள்ளில் கலக்கும் நோக்கத்துடன் கடத்திவரப்பட்டதாக தெரியவருகிறது. இந்த செயல்பாட்டின் முக்கிய மூளையாக செயல்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை கைது செய்ய தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. மதுபானத்தை கடத்த உதவிய லாரி ஓட்டுநரும் கைது செய்யப்பட்டார். இதுபோன்ற சட்டவிரோத மதுபான வர்த்தகங்களை தடுக்கும் நோக்கில், துறை தொடர்ந்து கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. பொது மக்கள் சட்டவிரோத மதுபான வர்த்தகம் தொடர்பான தகவல்களை இலவச தொலைபேசி எண். 10581 அல்லது சி.யூ.ஜி. எண். 9498410581 என்ற எண்ணிற்கு தகவல் வழங்கலாம். வழங்கப்படும் அனைத்து தகவல்களும் முழுமையாக ரகசியமாக பாதுகாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் இன்று முதல் காலவரையற்ற ஸ்டிரைக்

**நாமக்கல், மார்ச் 27-**

எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு தென் மண்டல எல்.பி.ஜி.டேங்கர் உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, உள்பட பல்வேறு மாநிலங்களை உள்ளடக்கிய இந்த சங்கத்தில் சுமார் 1500 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கு சொந்தமாக சுமார் 6 ஆயிரம் டேங்கர் லாரிகள் வாடகைக்கு இயக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக பாரத்பெட்ரோலியம், இந்தியன் ஆயில், இந்துஸ்தான் பெட்ரோலியம் உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் இந்த லாரிகள் இயக்கப்பட்டு வருகிறது. வருகிற ஆகஸ்ட் மாதத்துடன் பழைய ஒப்பந்த காலம் முடிவடைகிறது. அடுத்த செப்டம்பர் மாதம் 1-ந் தேதி முதல் 2025-ம் ஆண்டு முதல் 2030-ம் ஆண்டுக்கான புதிய ஒப்பந்தம் நடைமுறைக்கு வர உள்ளது. இந்த ஒப்பந்தத்திற்கான விதிமுறைகளை மத்திய அரசின் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்து இருந்தது.

அதில் பல்வேறு விதிமுறைகள் டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு பாதகமாக இருப்பதாக டேங்கர் லாரி உரிமையாளர்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சங்க உறுப்பினர்களுடன் தென்மண்டல எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் கூட்டங்களை நடத்தி ஆலோசனை மேற்கொண்டனர். அதை தொடர்ந்து எண்ணெய் நிறுவன அதிகாரிகளிடம் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சில விதிமுறைகளை தளர்த்துமாறு சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது குறித்து விரைவில் உரிய அறிவிப்பு வெளியிடப்படும் என்று எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். ஆனால் எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் இன்று நாமக்கல்லில் தென்மண்டல எல்.பி.ஜி.டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் சுந்தர்ராஜன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- எண்ணெய் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட புதிய ஒப்பந்தத்திற்கான விதிமுறைகளில் சாதகமாக ஏதும் இல்லை. பாதகமாகத்தான் உள்ளது. விதிமுறைகளை தளர்த்த நாங்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த அறிவிப்பும் வரவில்லை. புதிய ஒப்பந்தத்தின் விதிமுறையால் டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும். நஷ்டத்தில் எங்களால் டேங்கர் லாரிகளை இயக்க முடியாது. அதனால் இன்று (27-ம் தேதி) முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடுகிறோம். 4 ஆயிரம் எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் இயங்காது. எரிவாயு ஏற்றும் 10 இடங்களில் லோடுகளை ஏற்றாமல் லாரிகள் நிறுத்தப்படும். இந்த வேலைநிறுத்த போராட்டத்தால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். பிற மண்டலத்தினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம. அவர்களும் போராட தயாராக உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**27-03-2025**




**மேஷம்:-** மதிப்பு மரியாதை கூடும். விருப்பங்கள் யாவும் நிறைவேறும். அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆதரவால் முன்னேற்றம் கிடைக்கும். நம்பிக்கைக்கு உரியவர்கள் நிரந்தர நட்பு கிடைக்கும்.

**ரிஷபம்:-** இன்று, வருமானங்கள் அதிகரிப்பதால், பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்படும். தொழிலில் முன்னேற்றம், பணியில் இருப்பவர்களுக்கு பதவியுயர்வு கிடைக்கும்.

**மிதுனம்:-** இன்று, பயணங்கள் மூலம் வெற்றி கிட்டும். ஆராய்ச்சி மேற்கொள்ளும் எண்ணம் எழும். நிரந்தர மதநம்பிக்கை ஏற்படும். தொழில் புரிவோருக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவால் இலாபம் அதிகரிக்கும்.

**கடகம்:-** இன்று, வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. பிறருக்கு எப்போதும் நல்லதே நினையுங்கள். அதிகாரிகள் ஆணைகளை சிரம் ஏற்று நடந்தால் முன்னேற்றம் ஏற்படும். மனதில் எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும்.

**சிம்மம்:-** இன்று, இனிய பேச்சாலும் சாதுர்யத்தால், எடுத்த காரியங்கள் யாவற்றிலும். வெற்றி அடைவது உறுதி, அனைவரையும் கவர்வீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**கன்னி:-** இன்று, பயணத்தில் சுகானுபவங்கள் ஏற்படும். நண்பர்கள் நல்லுதவிகளை நாடினால், மறுக்காது உதவி செய்வார். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**துலாம்:-** இன்று, உங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். வண்டி வாகனங்களில் செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் செல்லவும். எல்லாவிதத்திலும் செலவுகள் கூடும். நிதானமாக செயல்படுங்கள்.

**விருச்சிகம்:-** இன்று, எடுக்கும் காரியங்கள் அனைத்தும் ஏனோ தானோ என முடிக்கும் சூழ்நிலை உருவாகும். இயலாமை காரணமாக இல்லத்தில் உள்ளவர்கள் மீது ஏற்படும் எரிச்சலை குறைத்தால், இரத்த அழுத்தம் கூடாது.

**தனுசு:-** இன்று, மனையாளின் ஒத்துழைப்பு மட்டற்ற மகிழ்ச்சி தரும். தனவரவு கூடும். புதிய முகநூல் நண்பர்கள் சேர்க்கையால், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும்.

**மகரம்:-** இன்று வீட்டிலும் வெளியிலும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. சிலர் துக்க நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள நேரலாம். அக்கறையுடன் படித்தால், கல்வியில் தடைகளைத் தகர்க்கும். பயணங்களில் கவனம் தேவை.

**கும்பம்:-** இன்று, நன்கு உடை உடுத்தி, நாகரீகமாக, மிடுக்காக மற்றவர்களை கவரும் வண்ணம் நடந்துகொள்வீர்கள். உங்கள் தேஜஸ் கூடும். தேவைக்கு அதிகமாகவே தனவரவு உண்டாகும்.

**மீனம்:-** இன்று, இடமாற்றங்கள் ஏற்படலாம். மங்கையரால் ஏற்படும் மாறாத செலவுகளால் பணமுடை ஏற்பட்டுக் கடன் பெறும் சூழ்நிலை உருவாகலாம். உண்ணவும் நேரமின்றி உழைக்க நேரிடும்.

### காதல் விவகாரத்தில்

## சிறுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த 2 பேர் கைது

**தூக்குத்துடி, மார்ச் 27-**

காதல் விவகாரத்தில் 17 வயது சிறுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

தூக்குத்துடி மாவட்டம் எட்டயபுரம் அருகே உள்ள கீழநம்பிபுரத்தைச் சேர்ந்தவர் அய்யனார். இவரது மனைவி காளியம்மாள். இந்த தம்பதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இவர்களது 17 வயது மகளும், பரமக்குடி பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் என்பவரும் காதலித்து வந்துள்ளனர். இதுகுறித்து அறிந்த அய்யனாரும், அவரது மனைவியும் தங்களது மகளை கண்டித்துள்ளனர். இதையடுத்து சிறுமி, அவருடன் பேசுவதை தவிர்த்துள்ளார்.

மேலும் சிறுமியை அவரது பாட்டி வீட்டுக்கு, பெற்றோர் அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் கடந்த 23-ம் தேதி அங்கு வந்த 2 இளைஞர்கள் சிறுமி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தனர். உயிருக்கு போராடிய சிறுமி மீட்கப்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவமனையில் சிறுமி அளித்த வாக்குமூலத்தில், அவரை கொலை செய்ய முயன்றது பரமக்குடியை சேர்ந்த சந்தோஷ் மற்றும் அவரது நண்பர் முத்தையா என்பது தெரிய வந்தது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த எட்டயபுரம் போலீசார் சந்தோஷ், முத்தையா இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## ஈரானில் பூமிக்கு அடியில் புதிதாக ஏவுகணை நகரம்

**தெஹ்ரான், மார்ச் 27-**

ஈரானில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சுரங்கத்தில், நூற்றுக்கணக்கான நவீன ரக ஏவுகணைகளை ஈரான் ராணுவம் சேமித்து வைத்துள்ளது. இந்த ‘ஏவுகணை நகரம்’ தொடர்பான வீடியோவை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ அமெரிக்கா, இஸ்ரேல் உள்பட ஈரானின் எதிரிகளாக கருதப்படும் நாடுகளுக்கு ஈரான் அரசு வெளியிட்ட எச்சரிக்கையாக பார்க்கப்படுகிறது. ஏற்கனவே இது போன்ற ஏவுகணை நகரம் மற்றும் கடற்படை சுரங்கம் தொடர்பான வீடியோவை ஈரான் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், ஈரான் அரசு தற்போது தங்கள் ராணுவ பலத்தை வெளிக்காட்டும் 85 வினாடிகள் கொண்ட வீடியோவை வெளியிட்டுள்ளது. மேலும், நேற்று தொடங்கினால் அடுத்த 2 ஆண்டுகளுக்கு, வாரத்திற்கு ஒரு ஏவுகணை நகரை உலகிற்கு அறிமுகப்படுத்துவோம் என ஈரான் கூறியுள்ளது. மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் சூழலுக்கு மத்தியில், ஈரான் அரசு வெளியிட்டுள்ள வீடியோ மேலும் பதற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னை: மின்சார ஏ.சி. பேருந்து - மாதிரி புகைப்படம் வெளியீடு

**சென்னை, மார்ச் 27-**

சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு 100 மின்சார பேருந்துகளை தயாரித்து வழங்குவதற்கான டெண்டரை போக்குவரத்துத் துறை கோரியிருந்தது. இந்நிலையில், மின்சார ஏ.சி. பேருந்தின் மாதிரி புகைப்படம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக அசோக் லேலண்ட் நிறுவனம் சார்பில் 500 சுவிட்ச் ஈ.ஐ.வி.12 மின்சார பேருந்துகளை வழங்க ஏற்கனவே டெண்டர் கோரப்பட்டுள்ளது. அந்நிறுவனம் 12 மீட்டர் சுவிட்ச் ஈ.ஐ.வி.12 மின்சார பேருந்துகளை 12 ஆண்டுகளுக்கு பராமரித்து இயக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமையும்; அமித்ஷா நம்பிக்கை

**டெல்லி, மார்ச் 27-**

தமீழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அமையும் என்று அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டுக்குமேல் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் தற்போதே அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., பா.ம.க., பா.ஜ.க., நாம் தமிழர் உள்பட பல்வேறு கட்சிகள் தேர்தலை எதிர்கொள்ள வியூகம் வகுக்கத்தொடங்கி விட்டன. கூட்டணி குறித்தும் அரசியல் கட்சிகள் தற்போதே முடிவுகளை எடுக்கத்தொடங்கி விட்டன. இதனிடையே, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று திடீர் பயணமாக டெல்லி புறப்பட்டு சென்றார். அவருடன் அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் சி.வி. சண்முகம், தம்பிதுரை, கே.பி. முனுசாமி, எஸ்.பி. வேலுமணி உள்ளிட்டோர் டெல்லி சென்றனர்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள், பா.ஜ.க. மூத்த தலைவரும், உள்துறை மந்திரியுமான அமித்ஷாவை சந்தித்தனர். தமிழக சட்டசபை தேர்தல், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி அமைப்பது உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. 1 மணிநேரத்திற்குமேல் ஆலோசனை நடைபெற்றது. இந்த சந்திப்பை தொடர்ந்து 2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமையும் என்று பா.ஜ.க. மூத்த தலைவரும், உள்துறை மந்திரியுமான அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 2026-ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்த பின்பு, மது வெள்ளமும், ஊழல் புயலும் முடிவுக்கு வந்துவிடும்’ என தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 2026 சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி அமையும் என்பது பெருமளவு உறுதியாகியுள்ளது.

### முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# கருப்பசாமி பாண்டியன் மறைவு: முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, மார்ச் 27-**

கருப்பசாமி பாண்டியன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியதாவது: முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி பாண்டியன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன். கருப்பசாமி பாண்டியன் அவர்கள் 1977-ல் ஆலங்குளம், 1980-ல் பாளையங்கோட்டை, 2006-ல் தென்காசி தொகுதிகளில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர் ஆவார். நீண்ட காலம் அவையின் உறுப்பினராக இருந்த அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் உடனடியாக இரங்கல் தீர்மானம் கொண்டு வந்துள்ளோம். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்னாள் எம்.எல்.ஏ.

# கருப்பசாமி பாண்டியன் மறைவு: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

**சென்னை, மார்ச் 27-**

முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பசாமி பாண்டியன் மறைவு - எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தை சேர்ந்த அ.தி.மு.க. அமைப்பு செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான கருப்பசாமி பாண்டியன் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 76. இந்நிலையில், கருப்பசாமி பாண்டியன் மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உருப்பினரும், கழகத்தின் மீது மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தவருமான ஏ.கருப்பசாமி பாண்டியன் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன். கட்சி நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரோடு மிகவும் நெருங்கிப் பழகியவரும், இதய தெய்வம் புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் பேரன்பைப் பெற்றவருமான அன்பு அண்ணன் கருப்பசாமி பாண்டியன், ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு திறம்பட கழகப் பணிகளை ஆற்றியவர்.

அதே போல், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக மக்கள் பணிகளை திறம்பட ஆற்றியவர். 1998-ல் திருநெல்வேலியில் கழக வெள்ளிவிழா மாநாடு எழுச்சியுடன் நடைபெற்றதற்கு இவர் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை. அன்பு அண்ணன் கருப்பசாமி பாண்டியனை இழந்து வாடும், அவரது மகனும், கழக எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைச் செயலாளருமான ஏ.மு.ஷங்கருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

# நடிகர் மனோஜ் உடலுக்கு விஜய் நேரில் அஞ்சலி



**சென்னை, மார்ச் 27-**

நடிகர் மனோஜ் உடலுக்கு நடிகரும் தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான விஜய் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

இயக்குநர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் மாரடைப்பு காரணமாக நேற்றுமுன்தினம் இரவு காலமானார். அவரது மறைவுக்கு திரையுலகினரும், அரசியல் பிரபலங்களும் சமூக வலைதளங்களில் இரங்கலை தெரிவித்துள்ளனர். அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக சென்னை நீலாங்கரையில் உள்ள பாரதிராஜாவின் இல்லத்தில் மனோஜின் உடல் வைக்கப்பட்டிருந்தது. . அவரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். இசையமைப்பாளர் இளையராஜா வீடியோ வெளியிட்ட நிலையில், திரையுலகினர் பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இதேபோன்று, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன், அமமுக பொதுச் செயலர் டி.டி.வி.தினகரன், தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த், வி.கே.சசிகலா, நடிகர் சரத்குமார் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் நேரில் இரங்கல் தெரிவித்துள்ளனர். நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், நடிகர்கள் சிவக்குமார், பிரபு, சூர்யா, கார்த்தி உள்ளிட்டோர் நேரில் சென்று மனோஜின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இந்த நிலையில், விஜய்யும் பாரதிராஜாவின் இல்லத்துக்கு நேரில் சென்று மாலை அணிவித்து மனோஜின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

# புதுச்சேரியை மாநகராட்சியாக தரம் உயர்த்த முடிவு: முதல்வர்

**புதுச்சேரி, மார்ச் 27-**

நகராட்சிகளை ஒன்றாக இணைத்து புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் தற்போது உள்ள புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளை ஒன்றாக இணைத்து புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று சட்டப்பேரவையில் அம்மாநில முதல்-அமைச்சர் ரங்கசாமி அறிவித்துள்ளார். முன்னதாக புதுச்சேரியில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. பட்ஜெட் மீதான விவாதமும், கேள்வி நேரத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சட்டப்பேரவையில் பேசிய அம்மாநில முதல்-அமைச்சர் ரங்கசாமி, புதுச்சேரி சுகாதாரத்துறையில் பணிபுரியும் ஆஷா பணியாளர்களுக்கு ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.18 ஆயிரமாக ஊதியம் உயர்த்தி வழங்கப்படும். புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளை இணைத்து புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும்'' என்று தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து சட்டப்பேரவையில் பல அறிவிப்புகளை அமைச்சர் நமச்சிவாயம் வெளியிட்டார். இதன்படி நீட் பயிற்சி பெற 585 மாணவர்கள் விண்ணப்பித்துள்ள நிலையில், புதுச்சேரி நகரப்பகுதியில் 2, கிராமப்புறங்களில் 2 மற்றும் காரைக்காலில் 1-நீட் பயிற்சி மையம் அரசு சார்பில் தொடங்கப்படும். 2025-26 ஆம் கல்வியாண்டு சி.பி.எஸ்.சி. பாடத்தை கற்பிக்க ஆசிரியர்களுக்கு தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாலை சிற்றுண்டி வாரம் இரு நாட்கள் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

வரும் கல்வியாண்டில் அனைத்து பள்ளி நாட்களிலும் மாலை சிற்றுண்டி வழங்கப்படும். அரசு பள்ளி மாணவர்கள் பாதுகாப்பு கருதி டிராக்கிங் ஸ்மார்ட் அடையாள அட்டை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும். புதுச்சேரியில் இந்தாண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து தெரு விளக்குகளும் எல்.இ.டி விளக்குகளாக மாற்றப்படும். மின்துறையில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்பப்படும். புதுச்சேரியில் 500 பள்ளிகளில் பெண் பிள்ளைகள் தங்களது குறைகளை தெரிவிக்க புகார் பெட்டி வைக்கப்படும்.

காவல் துறையில் 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள சீருடைபடி இந்த மாதத்திற்குள் வழங்கப்படும். பள்ளிக் கல்வியில் உள்ளது போல், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பாரதிதாசன் பெண்கள் கல்லூரி, புதுவை பல்கலைக் கழகம் உள்ளிட்ட அனைத்து நகர, கிராமப்புற கல்லூரிகளுக்கும் இலவச பஸ் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். காரைக்கால் பகுதியிலும் இலவச பஸ் இயக்கப்படும். சென்டாக் மூலம் விண்ணபிக்கப்படும் அனைத்து மாணவர்களுக்கும் விண்ணப்ப கட்டணம் விலக்கு அளிக்கப்படும்.

புதுச்சேரியில் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்கத்தொகை 2007/08 வரை வழங்கப்பட்டது. அதற்கு பின் ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை. வரும் நிதியாண்டில் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2024/25ஆம் ஆண்டு வரை விளையாட்டு வீரர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்கத் தொகை ரூ.9.38 கோடி ஆகும். இதன் மூலம் பதக்கம் வென்ற 1840 விளையாட்டு வீரர்கள் பயனடைவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

# 'சிங்கார சென்னை' புதிய பயண அட்டை அறிமுகம்



**சென்னை, மார்ச் 27-**

சிங்கார சென்னை என்ற புதிய போக்குவரத்து பயண அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:-தமிழக முதல்வரின் உத்தரவின்படி, மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இணைந்து வழங்கும் 'சிங்கார சென்னை' பயண அட்டை வாயிலாக பயணிகள் பயணச்சீட்டு பெற்று பயணம் மேற்கொள்ள ஏதுவாக, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நேற்று தலைமைச் செயலகத்தில் அறிமுகம் செய்து வைத்தார். சிங்கார சென்னை பயண அட்டையானது, பயணிகளுக்கு தடையற்ற மற்றும் பணமில்லா பரிவர்த்தனை பயண அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொலைநோக்குத் திட்டமாகும். மாநகர் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளிலும், ஏற்கனவே சிங்கார சென்னை பயண அட்டையை பயன்படுத்தும் வகையில், மின்னனு பயணச் சீட்டு வழங்கும் இயந்திரம் உபயோகத்தில் உள்ளது. இத்திட்டத்தில், ஏற்கனவே பாரத ஸ்டேட் வங்கி வாயிலாக "சிங்கார சென்னை" பயண அட்டைகள் வழங்கப்படுகிறது. இதில், 30,000-க்கும் மேலான பயண அட்டைகள் பயணிகளுக்கு வழங்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தும் வகையில் ஏர்டெல் பேமென்ட்ஸ் வங்கி சென்னை மாநகரின் முக்கிய பேருந்து நிலையங்கள் மற்றும் பயணிகள் பயன்பாடு அதிகம் உள்ள பேருந்து நிறுத்தங்களிலும் இந்த "சிங்கார சென்னை" பயண அட்டை ரூ.100/-க்கு வழங்கப்படும்.

இதில் ரூ.50/- மதிப்புக்கான பயணம் மேற்கொள்ளலாம். மேற்கொண்டு பயணம் மேற்கொள்ள இவ்வட்டைகளை இணையவழி சேவை, கைப்பேசி செயலி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கியின் விற்பனை மையங்கள் மூலமாக எளிதாக ரீசார்ஜ் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# அரசு ஊழியர்களுக்கு இந்த மாதம் சம்பளம் தாமதமாகும்

**சென்னை, மார்ச் 27-**

வருடாந்திர கணக்கு முடிவு காரணமாக அரசு ஊழியர்களுக்கு இந்த மாத இறுதியில் சம்பளம் வரவு வைக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஒவ்வொரு மாதமும் அரசு ஊழியர்களுக்கான சம்பளத்தை கடைசி தேதியில் விடுவித்து விடுவது வழக்கம். அதன்படி ஒவ்வொரு மாதமும் 30 அல்லது 31-ம் தேதி ஊழியர்களின் வங்கி கணக்கில் சம்பளப் பணம் வரவு வைக்கப்படும். ஒருவேளை கடைசி நாள் விடுமுறை நாளாக இருந்தால் அதற்கு முந்தைய நாள் சம்பளம் வரவு வைக்கப்படும்.

இந்த நிலையில் நடப்பு மார்ச் மாதத்திற்கான சம்பளம், வருடாந்திர கணக்கு முடிவு காரணமாக இந்த மாத இறுதியில் வரவு வைக்கப்படாது என்றும் இரண்டு நாள் தாமதமாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழக அரசின் கீழ் பணிபுரியும் சுமார் 9.30 லட்சம் அரசு ஊழியர்கள்/ஆசிரியர்கள் மற்றும் 7.05 லட்சம் ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்கள் ஆகியோரது மார்ச் மாதச் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இந்த ஆண்டு ஏப்ரல் 1 அன்று வருடாந்திர கணக்கு முடிவு காரணமாக வங்கிகளுக்கு விடுமுறை என்பதால், பணியாளர் மற்றும் ஓய்வூதியர்களின் வங்கிக் கணக்கில் 02.04.2025 அன்று வரவு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் செயின் பறிப்பு சம்பவம்:

# கொள்ளையன் சுட்டுக்கொலை

**சென்னை, மார்ச் 27-**

சென்னையில் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்ட மராட்டியத்தைச் சேர்ந்த ஜாபர் குலாம் என்ற கொள்ளையன் என்கவுன்டரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சென்னை அடையார் மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இடங்களில் தொடர் சங்கிலி பறிப்பு சம்பவங்கள் அரங்கேறின. காலை 6 மணி முதல் 7 மணி வரையிலான ஒரு மணி நேரத்தில் 6 இடங்களில் அடுத்தடுத்து வழிப்பறி சம்பவங்கள் நடைபெற்றதால் அடையார் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் வாகன சோதனையை தீவிரப்படுத்தினர்.

வழிப்பறி சம்பவம் நடைபெற்ற இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். இதில் 6 இடங்களிலும் கைவரிசை காட்டியது 2 பேர் அடங்கிய ஒரே கும்பல் என்பது அடையாளம் தெரிந்தது. மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் ஹெல்மெட் மற்றும் முகமூடியும்,

பின்னால் அமர்ந்திருந்தவர் தொப்பி மற்றும் முகமூடியும் அணிந்திருந்தனர். அவர்கள் வந்த வாகன எண்ணை போலீசார் ஆய்வு செய்ததில் அது போலியான பதிவெண் என்பது கண்டறியப்பட்டது.

இதைத்தொடர்ந்து அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் வாகனத்தின் நிறம் மற்றும் அவர்கள் அணிந்திருந்த உடை மூலம் அவர்கள் சென்ற இடங்களை கண்காணிப்பு கேமராக்கள் வரிசையாக காட்டி கொடுத்தது. 6 பெண்களிடம் 27 பவுன் நகைகளை வழிப்பறி செய்த அவர்கள் எந்தவித பதற்றமும் இல்லாமல் விமான நிலையத்தை நோக்கி சென்றதும், அங்கு அவர்கள் வழிப்பறி செயலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு விமான நிலையத்துக்கு உள்ளே செல்லும் காட்சிகளும் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது.

அவர்கள், கைவரிசை காட்டிய நகைகளுடன் விமானம் மூலம் ஐதராபாத் தப்பி செல்ல 'போர்டிங் பாஸ்' வாங்கி கொண்டு விமானத்தில் ஏறுவதற்கு காத்திருக்கும் தகவல் போலீசாருக்கு கிடைத்தது. இதையடுத்து நிலையத்துக்கு விரைந்த போலீசார் 2 பேரையும் அதிரடியாக கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் 2 பேரும் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த இரானிய கொள்ளை கும்பலை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

இந்த நிலையில், சென்னையில் தொடர் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு, விமான நிலையத்தில் கைதான ஜாபர் குலாம் ஹூசைன் (26), போலீஸ் நடத்திய என்கவுன்டரில் சுட்டுக்கொல்லப்பட்டார். தரமணி ரெயில் நிலையம் அருகே பதுக்கப்பட்ட நகைகளை மீட்க அழைத்துச் செல்லும் போது, போலீசாரை தாக்கிவிட்டு தப்ப முயன்றபோது போலீசார் ஜாபர் குலாம் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து ஜாபர் குலாமிடம் இருந்த பைக், கை துப்பாக்கி உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

மராட்டியத்தைச் சேர்ந்த ஜாபர் குலாம் மீது பல மாநிலங்களில் 50-க்கும் மேற்பட்ட கொள்ளை வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஜாபர் குலாம் தான் இந்த செயின் பறிப்பு சம்பவங்களில் மூளையாக செயல்பட்டதும் போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு பினாகினி எக்ஸ்பிரஸ் ரெயிலில் தப்பிய சல்மான் என்பவரை போலீசார் நெல்லூர் அருகே சுற்றி வளைத்து கைது செய்து,சென்னை அழைத்துவந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### சென்னையில் செயின் பறிப்பு சம்பவம்:

# 3-வது நபர் ஆந்திராவில் கைது

**சென்னை, மார்ச் 27-**

செயின் பறிப்பு சம்பவத்தில் ஜாபர் குலாம் ஹூசைன் என்பவர் என்கவுன்ட்டரில் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.;

சென்னை அடையார் மாவட்ட போலீசாருக்கு நேற்று முன்தினம் காலைப் பொழுது சோதனையாக அமைந்தது. இந்த போலீஸ் மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இடங்களில் தொடர் சங்கிலி பறிப்பு சம்பவங்கள் அரங்கேறின.

இந்தநிலையில் சென்னையில் தொடர் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்ட 3-வது கொள்ளையன் பெண்களிடம் பறித்த நகைகளுடன் ரெயிலில் தப்பி செல்லும் தகவல் போலீசாருக்கு கிடைத்தது.

உடனடியாக தனிப்படை போலீசார் விரைந்து சென்றனர். ஆந்திரா ரெயில்வே போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கொள்ளையன் தப்பி சென்ற ரெயில் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே நிறுத்தப்பட்டது. தப்பி சென்ற 3-வது கொள்ளையனான சல்மானை ஓங்கோல் பகுதியில் வைத்து ஆந்திர ரெயில்வே போலீசார் கைது செய்து சென்னை போலீசிடம் ஒப்படைத்தனர். சென்னைக்கு அழைத்து வரப்பட்டு ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட ஜாபர் குலாம் ஹூசைன் என்பவர் என்கவுன்ட்டரில் சுட்டுக்கொலப்பட்டார். திருடிய நகைகளை மீட்க அழைத்துச் சென்றபோது போலீஸாரை துப்பாக்கியால் சுட முயன்றதால் என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பலியான ஜாபர் குலாம் உடல் ராயப்பேட்டை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. ஜாபர் குலாம் பயன்படுத்திய டூவீலர், கைத் துப்பாக்கி உள்ளிட்ட பொருள்களை போலீசார் பறிமுதல் செய்தனர். சென்னையில் காவல் ஆணையராக அருண் பொறுப்பேற்ற பின் 4ஆவது என்கவுன்டர் நடைபெற்றுள்ளது.

# அடுத்த மார்ச் மாதத்திற்குள் 2 லட்சம் வீடுகள் கட்டப்படும்

### அமைச்சர் ஐ. பெரியசாமி தகவல்

**சென்னை, மார்ச் 27-**

ரூ.4 ஆயிரம் கோடியில் 10,545 கி.மீ. தூரம் சாலைகள் போடப்பட்டுள்ளன என்று சட்டசபையில் தெரிவித்த அமைச்சர் ஐ. பெரியசாமி, அடுத்த மார்ச் மாதத்திற்குள் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் 2 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தமிழக சட்டசபையில் உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் ஐ. பெரியசாமி அளித்த பதில் பின்வருமாறு:- கலைஞர் கனவு இல்லம் திட்டத்திற்காக ரூ. 3,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 25,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 2,418 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மார்ச் மாதத்திற்குள் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் 2 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு 1,122 கோடி ரூபாயில் 3 ஆயிரம் பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 4 ஆயிரம் கோ டி ரூபாயில் 10,545 கிலோ மீட்டர் தூரம் சாலைகள் போ டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இன்னும் 8 கிராமங்கள்தான் இணைக்கப்படாமல் உள்ளன. இவ்வாறு ஐ. பெரியசாமி தெரிவித்தார்.

### அமித்ஷாவுடன் இ.பி.எஸ். சந்திப்பு:

# தமிழக சட்டசபையில் தி.மு.க., அ.தி.மு.க. காரசார விவாதம்

**சென்னை, மார்ச் 27-**

அமித்ஷாவுடன் இ.பி.எஸ். சந்திப்பு விவகாரம் தொடர்பாக தமிழக சட்டசபையில் தி.மு.க. - அ.தி.மு.க. இடையே காரசார விவாதம் நடந்தது. டெல்லியில் அமித்ஷா உடனான எடப்பாடி பழனிசாமியின் சந்திப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரம் தற்போது தமிழக சட்டசபையில் பேசும்பொருளாக மாறி உள்ளது. சட்டசபையில் நேற்று அ.தி.மு.க. உறுப்பினர் கடம்பூர் ராஜூ பேசுகையில், அ.தி.மு.க. என்ற கட்சியே கணக்கு கேட்டதால் ஆரம்பிக்கப்பட்ட கட்சிதான். 2026-ல் முடிக்க வேண்டியவர்களின் கணக்கை முடித்து, எங்கள் கணக்கை தொடங்குவோம் என்று பேசினார். இதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு, கணக்கு கேட்டு ஆரம்பித்த கட்சி தான் அ.தி.மு.க. அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் இப்போது நீங்கள் (அதிமுக) தப்புக்கணக்கு போடுகிறீர்கள் என கூறினார். அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு பதில் அளிக்கும் விதமாக, எடப்பாடி பழனிசாமி போடக்கூடிய கணக்கு சரியாகத்தான் இருக்கும். கூட்டிக்கழித்து பார்த்தால் கணக்கு சரியாக இருக்கும் என்று சினிமா படபாணியில் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி பேசினார்.

### எல்லாம் நன்மைக்கே:

# எடப்பாடி - அமித்ஷா சந்திப்பு குறித்து ஓ.பி.எஸ்.

**சென்னை, மார்ச் 27-**

எல்லாம் நன்மைக்கே என்று இ.பி.எஸ்.. - அமித்ஷா சந்திப்பு குறித்து ஓ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி டெல்லியில் நேற்று முன்தினம் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசினார். இவர்களின் சந்திப்பு சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.பாராளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு, மும்மொழி கொள்கை விவகாரம் குறித்தும் இரு தலைவர்களும் பேசியதாக தெரிகிறது. சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ள நிலையில்,

பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணி பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், சட்டசபைக்கு வந்த ஓ.பன்னீர்செல்வத்திடம், டெல்லியில் அமித்ஷா உடன் எடப்பாடி பழனிசாமி சந்தித்தது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஓ.பன்னீர்செல்வம், "எல்லாம் நன்மைக்கே" என்று கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்தி வெளிநாடுகளில் இருந்தும், உள்நாட்டில் இருந்து அதிக அளவில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டுக்கு வந்துள்ள தொழில் முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

**- ராமதாஸ்**



மக்களவையில் தனக்குப் பேச வாய்ப்பு வழங்கப்படவில்லை. சபை "ஜனநாயகமற்ற" முறையில் நடத்தப்படுகிறது. சபாநாயகர் தன்னைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தபோது, தான் பேச வாய்ப்பளிக்காமல் சபையை ஒத்திவைக்கப்பட்டது. இதேபோல கடந்த வாரத்திலும் தனக்குப் பேச அனுமதி மறுக்கப்பட்டது.

**- ராகுல் காந்தி**



உத்தரப் பிரதேசம் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக இருக்கிறது. ஹிந்துக்கள் பாதுகாப்பாக இருந்தால், முஸ்லிம்களும் பாதுகாப்பாக இருப்பார்கள். நான் ஒரு சாதாரண உத்தரப் பிரதேச குடிமகன். நான் அனைவரின் மகிழ்ச்சியையும் விரும்பும் ஒரு யோகி. அனைவரின் ஆதரவையும் வளர்ச்சியையும் நான் நம்புகிறேன்.

**- யோகி ஆதித்யநாத்**



எடப்பாடி பழனிசாமி மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் அ.தி.மு.க. கட்டிடத்தை பார்வையிட செல்வதாக கூறினார்கள். ஆனால் அமித் ஷாவை சந்தித்தார்கள். ஏன் இவ்வளவு ஒளிவு மறைவாக உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்க வேண்டிய அவசியம் என்ன?. பகிரங்கமாக சந்திக்கலாமே... ஒளிந்து மறைந்து சந்திக்க வேண்டிய அவசியம் இல்லையே.

**- முத்தரசன்**



சென்னை திருவிகநகர் 73வது வார்டுக்குப்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் கேட் சாலையில் மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரனை அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார். உடன் மேயர் ஆர்.பிரியா, தாயகம்கவி எம்எல்ஏ, மாமன்ற உறுப்பினர் அம்பேத் வளவன் உள்ளனர்.



சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் சட்டமன்ற பேரைவையில் அறிவிக்கப்பட உள்ள அறிவிப்புகள் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற கூடுதல் தலைமை செயலாளர் காகர்லா உஷா, வளர்ச்சி குழும உறுப்பினர் சு.பிரபாகர் முதன்மை செயலாளர் சிவஞானம் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருமழிசை பேரூராட்சி 16 வது வார்டு பட்டேல் தெருவில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தின் கட்டுமான பணிகள் குறித்தும், அதே பகுதியில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிட பணி நடைபெற்று வரும் கட்டுமான பணிகள் குறித்து கலெக்டர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஒன்றிய அரசின் விதிமுறைகளின்படி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் சமதள பகுதியில் அமைய வேண்டுமென்றால் 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும்: சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை,மார்ச்.27**

ஒன்றிய அரசின் விதிமுறைகளின் படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் சமதள பகுதியில் அமைய வேண்டுமென்றால் 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும் என்று உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார். அந்த விவாதமுறையில் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் கோம்பை, வண்ணாடு ஆகிய இரு ஊராட்சிகள் இருக்கின்றன. கோம்பையைப் பொறுத்தவரை, எட்டு கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சியாகவும், அதனுடைய மக்கள் தொகை 2,039 என்கின்ற வகையிலும், வண்ணாடு என்கின்ற ஊராட்சி எட்டு கிராமங்களை உள்ளடக்கியதாகவும் அதனுடைய மக்கள் தொகை 1455 என்கின்ற வகையிலும் இருந்துக் கொண்டிருக்கின்றன. இந்த இரு ஊராட்சிகளிலும் ஏற்கெனவே இரண்டு துணை சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்த இரண்டு துணை சுகாதார நிலையங்களும் அதற்குட்பட்ட மக்களைப் பொறுத்தவரை இடைநிலை சுகாதார செவிலியர்கள் மூலம் eSanjeevani முறையில் செங்காட்டுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, புதியதாக அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கோம்பையை பொறுத்தவரை, கோம்பை புதூர், குண்டூர், ஏரிக்காடு, எருமப்பட்டி, மருதை, மேலூர், தாளூர், செம்புலிச்சாம்பட்டி என்கின்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. அதேபோல் வண்ணாடு பகுதியை பொறுத்தவரை, இலுப்பூர், புதூர், கிணத்தூர் போன்ற 8 கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஊராட்சிக்குட்பட்டவை, 8 கிராமங்கள், 8 கிராமங்கள்தான். உறுப்பினர் கூறியது போல 30,40 கிராமங்களெல்லாம் இல்லை. வேறு ஊராட்சியில் இருப்பதையெல்லாம் சேர்த்து சொல்கிறார்கள். இங்கு இரண்டு துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அறிவுறுத்தலைப் பெற்று, இன்னும் ஒரு புதிய துணை சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றிய அரசின் விதிமுறைகளின்படி, புதிய ஆரம்ப சுகாதார நிலையம் சமதள பகுதியில் அமைய வேண்டுமென்றால், 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். மலைக்கிராமங்கள் என்றால், 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். துணை சுகாதார நிலையம் அமைய வேண்டுமென்றால், சமதள பகுதியில் 5000 மக்கள் தொகை இருக்க வேண்டும். கிராமப்புறங்கள் 3000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதை அறிவுகூர்ந்து... கடற்கரை பகுதி சமதள பகுதியில் வந்து விடும். 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். இந்த விதிமுறைகளின்படி இருக்கின்றதா என்பதை நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். அதில் எத்தனை துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன, எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்பதை கணக்கில் வைத்துக் கொண்டு அதற்கு பிறகு கேட்கலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் 80 ஆயிரம் *helmet villages* இருக்கின்றன. அனைத்து *villages*-க்கும் ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்பது எல்லோருடைய கோரிக்கையாக இருக்கும், மக்களுடைய விருப்பமும் இருக்கும். அதை நிறைவேற்றுவதற்கு அரசு விதிமுறைகளில் இடம் கிடைக்க வேண்டும். ஆனாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, எதிர்காலத்தில் புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.



விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் என்று *Sanctioned strength* என்கின்ற வகையிலான மருத்துவ பணியிடங்கள் இருக்கின்றன. அந்தப் பணியிடங்கள் காலியாகாமல் இருக்கின்றதா என்பதை மட்டுமே பார்த்துக் கொள்ள முடியும். அந்தவகையில் புதிய பணியிடங்களை உருவாக்குதற்குரிய நோயாளிகளின் எண்ணிக்கை கூடுதல் போன்ற பல்வேறு விஷயங்கள் ஆராயப்பட்டுதான் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று எதிர்காலத்தில் அங்கே வருகிற நோயாளிகளின் எண்ணிக்கை, வழங்கப் பெறுகிற சிகிச்சை முறைகள் கண்டறிந்து புதிய பணியிடங்கள் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யார் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு இந்த 15 கிலோ மீட்டருக்கு இடைவெளியில் எத்தனை துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து சட்டமன்ற உறுப்பினர் நாளை என்னிடத்தில் தனியாக தெரிவிப்பாரேயானால் இல்லாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் அவர் மனநிறைவு கொள்ள வேண்டும் என்று தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# அண்ணா சாலையில் ஆபத்தான முறையில் வாகன சாகசம் செய்த 6 பேர் கைது

**.சென்னை மார்ச் 27-**

சென்னை பெருநகர காவல் எல்லைக்குட்பட்ட சாலைகளில் அபாயகரமாக இரு சக்கர வாகனங்களில் வாகன சாகசம் செய்யப்படுவதை தடுக்கும் பொருட்டு பிரதான சாலைகளில் வாகன தணிக்கை செய்ய சென்னை பெருநகர காவல் காவல் ஆணையர் ஆ.அருண் உத்தரவின் படி, தியாகராய நகர் காவல் மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதான சாலைகளில் சுழற்சி முறையில் வாகனத் தணிக்கை செய்யப்பட்டு வந்த நிலையில் கடந்த 23.ந் த் தேதி அன்று நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் அண்ணா சாலையில் ஆபத்தான முறையில் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக இருசக்கர வாகன சாகசத்தில் ஈடுபட்ட நபர்களை, அண்ணாசாலை, எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்ட காவலர்கள் மடக்கிப்பிடிக்க முயற்சித்த போது காவலர்களை தள்ளிவிட்டு தப்பிச் சென்ற ஆறு இளைஞர்கள் மீது தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளைத் தேடிவந்த நிலையில் இன்று மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட 1)மெல்வின் ஜோஸ்வா, 2) கதிரவன், 3) தீபக் ஜான், 4) போத்தீஸ்வரன், 5) பவன் ராஜு, 6) வேதேஷ், ஆகியோர் கைது செய்யப்பட்டு குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டனர். மேலும், அவர்கள் வாகன சாகசத்திற்கு பயன்படுத்திய நான்கு இருசக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# சென்னை ஆதம்பாக்கம் கொலை வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

**சென்னை மார்ச் 27-**

சென்னை, ஆதம்பாக்கம், சரஸ்வதி நகர் 7வது தெருவில் வசித்து வந்த இந்துஜா, என்பவர் கடந்த 2013 முதல் பேஸ்புக் மூலம் அறிமுகமான ஆகாஷ் என்பவரை காதலித்து வந்துள்ளார். பின்னர் இந்துஜா கடந்த 2017 முதல் ஆகாஷிடம் பேசுவதை நிறுத்தியுள்ளார். இந்நிலையில் இந்துஜாவிற்கு வீட்டில் வேறு மாப்பிள்ளை பார்த்து வந்ததால் 13.11.2017 அன்று இரவு, ஆகாஷ் மேற்படி இந்துஜா வீட்டிற்கு பெட்ரோல் நிரப்பிய கேனுடன் சென்று, இந்துஜா மீது பெட்ரோல் ஊற்றி, தீ வைத்துள்ளார். அப்போது தடுக்க வந்த இந்துஜாவின் தாயார் ரேணுகா மற்றும் இந்துஜாவின் தங்கை நிவேதா ஆகியோர் மீதும் தீக்காயம் பட்டுள்ளது. இதில் சம்பவயிடத்திலேயே இந்துஜா இறந்துள்ளார். தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இந்துஜாவின் தாயார் சிகிச்சை பலனின்றி 28.11.20217 அன்று உயிரிழந்தார். இது குறித்து ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் கொலை (2 எண்ணிக்கை), கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி ஆகாஷ், என்பவரை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர்.

இவ்வழக்கு, ஆதம்பாக்கம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, செங்கல்பட்டு, மகளிர் நீதிமன்றத்தில் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. மேற்கண்ட கொலை வழக்கில் தொடர்ச்சியாக சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நிலைய ஆய்வாளர், நீதிமன்ற காவல் ஆளிநர்கள் சீரிய பணியாற்றி விசாரணை முடிவடைந்து, நீதிமன்றத்தால் இறுதி தீர்ப்பு கடந்த 17. ந் தேதி அன்று வழங்கப்பட்டது.இக்கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஆகாஷ் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், குற்றவாளி ஆகாஷ் என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் மொத்தம் ரூ.8,000/- அபராதம் விதித்து கனம் செங்கல்பட்டு, மகளிர் நீதிமன்றம், அமர்வு நீதிபதி தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த ஆதம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர், காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்

# மெரினா கடற்கரையில் கத்தி முனையில் பணம் பறித்தவர் கைது

**சென்னை மார்ச் 27-**

திருவான்மியூர், விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த சாமுவேல், என்பவர் சுமார் 6 மாதங்களாக மாட்டாங்குப்பத்தில் உள்ள ஒரு பாட்டியின் மீன்கடையில் வேலை செய்துகொண்டு, வேலை முடித்து இரவு மெரினா கடற்கரை மணற்பரப்பில் வழக்கமாக தூங்குவார். சாமுவேல் 23 ந் தேதி அன்று இரவு மெரினா கடற்கரை சுபாஷ் சந்திர போஸ் சிலை பின்புறமுள்ள மணற்பரப்பில் தூங்கி கொண்டிருந்தபோது, ஒரு நபர் சாமுவேலை எழுப்பி கத்தியைக் காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளார். சாமுவேல் பணம் தர மறுக்கவே, அந்த நபர் கத்தியால் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சாமுவேலின் கையில் தாக்கி அவர் வைத்திருந்த பணம் ரூ.1,250/-ஐ பறித்துக் கொண்டு மிரட்டிச் சென்றார். இரத்தக் காயமடைந்த சாமுவேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து மெரினா காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர். மெரினா காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய எதிரி மகேந்திரன் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.700/- மற்றும் குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

# சென்னை வி.ஐ.டி பல்கலைக்கழக தின விழா: மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கு 6சதவீதம் செலவிட வேண்டும்: விஐடி வேந்தர் கோ.விஸ்வநாதன் கோரிக்கை

**சென்னை மார்ச் 27-**

சென்னை விஐடி பல்கலைக்கழக தின விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு விஐடியின் நிறுவனரும், வேந்தருமான கோ.விசுவநாதன் தலைமை தாங்கினார். விஐடியின் துணை தலைவர் ஜி.வி. செல்வம் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஆஸ்திரேலிய துணை தூதரக அதிகாரி கேத்ரினா நேப், டிசிஎஸ் நிறுவனத்தின் தலைமை மனிதவள மேம்பாட்டு அதிகாரி (நியமிக்கபட்ட) சுதீப் குன்னுமால் ஆகியோர் பங்கேற்றனர். சென்னை விஐடியின் இணை துணைவேந்தர் டி.தியாகராஜன் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார்.சிறப்பு விருந்தினர் கேத்ரினா நேப் பேசுகையில், “இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் கல்வியில் வலுவான தொடர்பை கொண்டுள்ளன. இதற்காக இரு நாட்டு அரசுகளும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. அதன்படி, ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி பயில வருகின்றனர். தற்போது, 1 லட்சம் இந்திய மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றனர்” என்றார்.விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் பேசும்போது, “இந்தியாவில் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் 28 சதவிகிதம். ஆனால், பல நாடுகளில் 70 முதல் 80 சதவிகிதமாக உள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியாவில் 100 சதவிகிதமாக உள்ளது. அந்த நாடுகள் எவ்வாறு உயர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன என்று நாம் கற்க வேண்டும். அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவிகிதத்துக்கும் அதிகமாக கல்விக்காக செலவு செய்கின்றனர்.இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவிகிதத்துக்கு அதிகமாக கல்விக்காக செலவு செய்ய வேண்டும் என்று 60 ஆண்டுகளாக விரும்புகிறோம். நடப்பு நிதியாண்டில் ரூ.50 லட்சம் கோடி நிதிநிலை அறிக்கையில் 2.5 சதவிகிதம் மட்டும் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது'' என்றார்.இதனையடுத்து, வகுப்பில் சிறந்து விளங்கிய மாணவ – மாணவிகள் விருதுகள் மற்றும் பரிசுத்தொகை வழங்கி கவுரவிக்கப்பட்டனர். விழாவில், சென்னை வி.ஐ.டியின் கூடுதல் பதிவாளர் பி.கே.மனோகரன், பேராசிரியர்கள், ஏராளமான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# பூந்தமல்லி - பெங்களூர் நெடுஞ்சாலையில் உள்ள குளிர்பான கிடங்கில் பயங்கர தீ விபத்து

**சென்னை மார்ச் 27-**

சென்னை பூந்தமல்லி – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தனியார் குளிர்பான கிடங்கில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. குளிர்பான கிடங்கில் ஏற்பட்டுள்ள தீ விபத்தால் குடோனில் உள்ள பொருட்கள் வெடித்து சிதறியதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.தீ விபத்து காரணமாக கரும்புகை அதிகளவில் வெளியேறுவதால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு கண் எரிச்சல் மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்ட உடன் குளிர்பான கிடங்கில் பணியாற்றியவர்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டனர். இதன் காரணமாக உயிர் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.45 நிமிடங்களுக்கு மேலாக எரிந்து வரும் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் தீவிரமாக ஈடுப்பட்டுள்ளனர். தீ விபத்திற்கான காரணமா குறித்து பூந்தமல்லி போலீசார் மற்றும் தீயணைப்புத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். முழுமையாக தீயை அணைத்த பிறகே தீயில் எரிந்த பொருட்கள் குறித்த தகவல் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# சென்னையில் செயின் பறிப்பு கொள்ளையன் என்கவுன்ட்டர் சம்பவத்தில் நடந்தது என்ன? காவல் ஆணையர் அருண் விளக்கம்

**சென்னை மார்ச் 27-**

சென்னையில் செயின் பறிப்பு கொள்ளையன் என்கவுன்ட்டர் செய்யப்பட்டது தொடர்பாக காவல் ஆணையர் அருண் விளக்கம் அளித்து வருகிறார். சென்னை அடையாறு பகுதிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொடர் செயின் பறிப்பு சம்பவங்களின் மூளையாக செயல்பட்ட கொள்ளையன் ஜாபர் குலாம் ஹூசைன், போலீஸ் என்கவுண்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.சென்னையில் கொள்ளையர்கள் பறித்துச் சென்ற செயின்கள் மீட்கப்பட்டுள்ளன. பதுக்கி வைத்துள்ள நகைகளை மீட்க கொள்ளையன் ஜாபரை அழைத்து சென்ற போது போலீசை தாக்கி விட்டு தப்ப முயற்சி செய்தனர்.

சென்னையில் நேற்று முன் தினம் 7 இடங்களில் அடுத்தடுத்து செயின் பறிப்பு சம்பவங்கள் நடைபெற்றன. ஈஞ்சம்பாக்கம் பெத்தேல்நகர், அடையாறு சாஸ்திரி நகர், அடையாறு இந்திரா நகர், கிண்டி எம்ஆர்சி உள்ளிட்ட பகுதிகளில் இந்த சம்பவங்கள் நடைபெற்றன.காலை 4.15 மணிக்கு விமானத்தில் சென்னை வந்து, 6 மணிக்கு செயின் பறிப்பில் ஈடுபட்டு, 10 மணிக்கு விமானத்தில் தப்ப முயற்சி செய்துள்ளனர். இந்த கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட வடமாநில கொள்ளையர்கள் விமானங்கள் மூலம் தப்பிச் செல்ல முயன்றனர். ஆனால் சென்னை போலீசார் அதிவேகமாக செயல்பட்டு விமான நிலையத்துக்குள் சென்று வடமாநில கொள்ளையர்களை கைது செய்தனர். இதேபோல ரயில் மூலம் தப்பிச் செல்ல மற்றொரு கொள்ளையனை ஆந்திரா அருகே ஓடும் ரயிலில் மடக்கியும் போலீசார் கைது செய்தனர்.சென்னையில் நேற்று முன் தினம் நிகழ்ந்த செயின் பறிப்பு சம்பவங்கள் அனைத்திலும் ஒரே நபர் தான் இரு சக்கரவாகனத்தில் அமர்ந்து பெண்களிடம் செயினை பறிப்பது தெரியவந்தது. செயின் பறிப்பு சம்பவங்களில் கில்லாடியான ஜாபர் தான் அந்த நபர் என்பதையும் போலீசார் உறுதி செய்தனர். மகாராஷ்டிரா மாநில போலீசாராலும் தேடப்பட்ட ஜாபர் மீது 50-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன இதனையடுத்து ஜாபரை சுற்றி வளைத்த போலீசார் கைது செய்தனர்.



ஜாபரை கைது செய்த போலீசார் பதுக்கி வைத்த நகைகளை மீட்பதற்காக அழைத்துச் சென்றனர். அப்போது தரமணி ரயில் நிலையம் அருகே, போலீஸ் பிடியில் இருந்து ஜாபர் தப்ப முயன்றார். இதனால் திருவான்மியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் புகாரி, ஜாபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில் ஜாபர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சென்னை ராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் ஜாபர் உயிரிழந்தார். சென்னையில் செயின் பறிப்பில் ஈடுபட்ட 3 பேரும் இரானி கொள்ளையர்கள். கொள்ளையர்கள் பறித்துச் சென்ற செயின்கள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன. பிடிபட்ட கொள்ளையர்கள் மீது நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.இந்த கொள்ளை சம்பவத்தில் உள்ளூர் நபர்களுக்குத் தொடர்பு இல்லை. குற்றம் நடந்த 3 மணி நேரத்தில் கொள்ளையர்கள் கைது. 100க்கும் மேற்பட்ட சிசிடிவி காட்சிகளை வைத்தே குற்றவாளிகளைப் பிடித்தோம்.விமானத்தை நிறுத்தி வைத்து, அதிலிருந்து குற்றவாளிகளைக் கைது செய்தோம். விமானத்தில் இருந்த குற்றவாளிகளை கைது செய்ய விமான நிலைய அதிகாரிகள், பயணிகள் ஒத்துழைத்தனர்.பறித்த நகைகளை 3 கொள்ளையர்கள் தனித்தனியாக எடுத்துச் சென்றுள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட 26 சவரன் கொண்ட 6 செயின்கள் மீட்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் பயன்படுத்திய பைக், கர்நாடக மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்ய கைதானவர்களை அழைத்துச் சென்றபோது என்கவுன்ட்டர் நடந்துள்ளது. சுட்டுக்கொல்லப்பட்ட குலாம் 2 ரவுன்ட் சுட்டது, போலீஸ் வாகனத்தில் பட்டது. தற்காப்புக்காக போலீஸ் ஒரு முறை சுட்டனர். தற்காப்பு நடவடிக்கையாக என்கவுன்டர் நடந்தது. சென்னையில் இதுவரை நடந்த எந்த செயின் பறிப்பு வழக்கிலும் குற்றவாளிகள் பிடிபடாமல் இல்லை. மக்களின் கவனத்தை திசை திருப்பி நகை பறிப்பில் ஈடுபடுவதே இரானி கொள்ளை. ஆந்திர மாநிலம் ஓங்கோலில் பிடிபட்ட குற்றவாளியை போலீஸ் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். சென்னையில் ஏற்கனவே கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்களா என விசாரணை நடந்து வருகிறது

ஈரோடு தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது



ஈரோடு.மார்ச்.27-

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ராஜ கோபால் சுன்கரா, தலைமையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ், அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்ற தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற திட்டத்தின் கீழ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வேளாண்மை - உழவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பொது சுகாதாரத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பேரூராட்சிகள் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வனத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, போக்குவரத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, முதல்வரின் முகவரி, உணவு பாதுகாப்புத்துறை, பள்ளிகல்வித்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட துறைச்சார்ந்த முதன்மை அலுவலர்கள் தாளவாடி வட்டத்திற்குட்பட்ட அருளவாடி, மல்லன்குழி, மாதஹள்ளி, பையண்ணபுரம், கொங்கள்ளி, கெட்டவாடி, பனகஹள்ளி, தொட்டமுதுகரை, எரகனஹள்ளி, திகினாரை, கரளவாடி, சிக்ககாஜனூர், மரூர், இக்கலூர், நெய்தாளபுரம், தலமலை, ஆசனூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மருத்துவமனைகள், துறைச் சார்ந்த அலுவலகங்கள், பள்ளிகள், ஒழுங்கு முறை விற்பனை கூடம், பொது நூலகங்கள் மற்றும் இதர அரசு அலுவலகங்களில் அரசின் திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் விவாதித்தார். மேலும், ஆய்வுகளில் கண்டறியப்பட்ட குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கிராம நிர்வாக அலுவலகம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்களில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் சுற்றுப்புறத்தை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும், பள்ளிகளில் மாணவர்கள் கற்றல் திறனை தொடர்ந்து கண்காணிடத்திட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 83 மனுக்களை பெற்று, தொடர்புடைய துறை அலுவலர்களிடம் வழங்கி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும், 8 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அர்பித் ஜெயின் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்தராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜ கோபால், மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் பூங்கோதை உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊட்டி குளுகுளு சீசனையொட்டி கோடை கால சிறப்பு மலை ரயில் நாளை முதல் இயக்கம்: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி



ஊட்டி மார்ச் 27.

கோடை கால சிறப்பு மலை ரயில் நாளை(28-ந்தேதி) முதல் இயக்கப்படுவதால்; சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஊட்டி குளுகுளு சீசனையொட்டி வருடந் தோறும் சுற்றுலா பயணிகள் வசதிக்காக சிறப்பு மலை ரயில் இயக்கப்படுவதுண்டு. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு சிறப்பு மலை ரயில் மேட்டுப்பாளையம்- ஊட்டி இடையே நாளை வெள்ளிக்கிழமை முதல் இயக்கப்படுகிறது. வரும் ஜூலை மாதம் 7ந்தேதி வரை இந்த சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. மேட்டுப்பாளையத்தில் இந்த சிறப்பு மலை ரயில் காலை 9.10 மணிக்கு புறப்பட்டு மதியம் 2.25 மணிக்கு ஊட்டி வந்தடையும். இந்த சிறப்பு மலை ரயில் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்று கிழமைகளில் இயக்கப்படுகிறது. இதே போன்று மறு மார்க்கத்தில் ஊட்டியிலிருந்து- மேட்டுப்பாளையத்திற்கு சனி மற்றும் திங்கட்கிழமைகளில் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. ஊட்டியில் காலை 11.25 மணிக்கு புறப்பட்டு மாலை 4.20 மணிக்கு மேட்டுப்பாளையம் சென்றடைகிறது.

இதே போன்று ஊட்டி குன்னூர் இடையே சிறப்பு மலை ரயில் இதே காலகட்டத்தில் இயக்கப்படுகிறது. குன்னூரில் காலை 8.20 மணிக்கு புறப்படும் இந்த சிறப்பு ரயில் ஊட்டிக்கு 9.40 மணிக்கு வந்தடையும். மறு மார்க்கத்தில் ஊட்டியில் 4.45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் மாலை 5.55 மணிக்கு குன்னூர் சென்றடைகிறது. இந்த சிறப்பு ரயில் வெள்ளி, சனி ஞாயிறு மற்றும் திட்கட்கிழமைகளில் இயக்கப்படுகிறது. இந்த சிறப்பு மலை ரயில் ஜூலை மாதம் ஏழாம் தேதி வரை இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இந்த ரயிலில் முதல் வகுப்பில் 80 இருக்கைகளும், இரண்டாம் வகுப்பில் 130 இருக்கைகளும் உள்ளன. இதேபோன்று ஊட்டி- கேத்தி-ஊட்டி சிறப்பு ரயிலும் நாளை முதல் இயக்கப்படுகிறது. இந்த ரயிலானது காலை 9.45 மணி, முற்பகல் 11.30 மணி, பிற்பகல் 3.00 மணி ஆகிய நேரங்களில் ஊட்டியிலிருந்து புறப்பட்டு லவ்டேல் வழியாக கேத்தி சென்று, மீண்டும் கேத்தியிலிருந்து முற்பகல் 11.00 மணி, மதியம் 1.10, மாலை 4.30 மணிகளில் ஊட்டிக்கு திரும்பும். இந்த ரயிலும் வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இயக்கப்படும். கோடை விடுமுறை கால சிறப்பு ரயில்கள் அனைத்தும் வெள்ளி முதல் திங்கள் வரை இயக்கப்படுகிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி வரை செல்லும் சிறப்பு ரயிலில் மேட்டுப்பாளையம் முதல் குன்னூர் வரை 40 முதல் வகுப்பு இருக்கைகளும், 140 இரண்டாம் வகுப்பு இருக்கைகளும் இருக்கும். குன்னூர் முதல் ஊட்டி வரை 80 முதல் வகுப்பு இருக்கைகளும், 140 இரண்டாம் வகுப்பு இருக்கைகளும் இருக்கும். இந்த மேட்டுப்பாளையம்- ஊட்டி சிறப்பு ரயிலானது கல்லார், ஹில்குரோவ், குன்னூர், வெலிங்டன், அருவங்காடு, கேத்தி, லவ்டேல் ஆகிய ரயில் நிலையங்களில் இரு மார்க்கத்திலும் நின்று செல்லும். எனவே இந்த ரயிலில் முன்பதிவு செய்து பயணிக்கலாம் என ரயில்வே நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# சக்தி மசாலா நிறுவனத்திற்கு தேசிய விருது



ஈரோடு மார்ச் 27

மும்பையில் உள்ள நியாயமான வணிக நடைமுறைகள் கவுன்சில் (CFBP) அமைப்பு நடத்திய தேசிய விருது வழங்கும் விழா நடந்தது.

தேசிய அளவில் நியாயமான வணிக நடைமுறைகளை கடைப்பிடித்தமைக்காக, தயாரிப்பு நிறுவனங்கள் – பெரிய தொழிற்சாலை பிரிவு என்ற வகையில், சக்தி மசாலா நிறுவனத்திற்கு 2024-25ஆம் ஆண்டுக்கான ஜம்னலால் பஜாஜ் தேசிய விருது வழங்கப்பட்டது. விருதை, டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் ரவிகாந்த், வழங்கினார்.சக்தி மசாலா நிறுவனர்கள் டாக்டர். பி.சி. துரைசாமி, டாக்டர். சாந்தி துரைசாமி மற்றும் செல்வன் செங்கதிர்வேலன் ஆகியோர் சக்தி மசாலா நிறுவனத்தின் சார்பில் விருதினை பெற்றுக் கொண்டனர்.

# பாதங்களை பாதுகாப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு மார்ச் 27-

உலக காலணிகள் வழங்கும் மாதத்தை முன்னிட்டு "நீரிழிவு கால் பராமரிப்பு மற்றும் காலணிகள் விநியோகம் குறித்த பாதம் பாதுக்காப்போம் " நிகழ்ச்சி ஈரோடு தந்தை பெரியார் அரசு மருத்துவமனையில், நேற்று நடைபெற்றது

ஈரோடு அரசு மருத்துவமனை ஆர் எம் ஓ டாக்டர் சசிரேகா தலைமை தாங்கினார் அப்போது அவர் கூறுகையில் கால்களில் செருப்பு அணியாமல் ஏற்படுவதால் வரும் நோய்களை முதலிலேயே கவனித்துக் கொள்ள வேண்டும் மக்கள் அவசியமாக காலணிகள் அணிய வேண்டும் மேலும் இதற்கான அனைத்து மருந்துகளும் ஈரோடு அரசு மருத்துவமனையில் கிடைக்கிறது. இவ்வாறு கூறினார் தொடர்ந்து

ஜைட்டோ அமைப்பின் தலைவர்ஸ்ரீ கவுதம் போத்ரா.ஜைட்டோ தலைமை செயலாளரும் பாசம் பவுண்டேஷன் தலைமை இயக்குனருமான ஆர். விப்புல் சந்தலியா ஜெயின் ஆகியோர் கூறுகையில் ஜைன் சர்வதேச வணிக அமைப்பு (ஜைட்டோ) சமுதாய நலனுக்கான செயல்பாடுகளை முன்னெடுத்து, சமூக பொறுப்புத்தன்மையை ஊக்குவித்து, ஆரோக்கிய சேவைகள் வழங்குகிறது.எங்கள் அமைப்பின் மூலம் இன்று 150 பேர் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் மற்றும் பிறர்க்கு இலவசமாக காலணிகள் வழங்குகிறோம் மேலும் விவரங்களுக்கு ஜைட்டோ : 9364116675 என்ற எண்ணில் எங்களை தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு கூறினார்கள்

**மழைநீர் உயிர்நீர்**

கோவை, ஈரோடு, நாமக்கல், திருப்பூர், சேலம், கரூர் மாவட்டங்களில்

# சாயத்தொழில் - தோல் தொழில் வளர்ச்சிக்கு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட வேண்டும்

## ஜெய்பீம் மக்கள் பேரவை நிறுவன தலைவர் அறிவழகன் கோரிக்கை

ஈரோடு மார்ச் 27-

ஜெய்பீம் மக்கள் கட்சி- ஜெய்பீம் மக்கள் பேரவை நிறுவன தலைவர் அ.அ. அறிவழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதன்மையாக வளர்ந்து வருகின்ற சூழலில், குறிப்பாக தமிழ்நாட்டில் மேற்கு மண்டலத்தில் ஈரோடு ,நாமக்கல், சேலம், திருப்பூர் கோவை , மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் முதன்மைத் தொழிலாக இருக்கக் கூடியவை ஜவுளி தொழில் - தோல் தொழிலாகும் , மற்றும் விவசாயமும், ஆகிய தொழில்கள் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியாக இருக்கக்கூடியவை ஆகும். இத்தொழிலை நம்பி கோடி கணக்கான தொழிலாளர்கள் , பணிபுரிந்து வருகிறார்கள் இத்தொழிலில் மிக அதிக அளவில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் வட இந்தியாவில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் வந்து பணிபுரிகிறார்கள் , சூழலில் தற்போது ஜி எஸ் டி -மின் கட்டண உயர்வு பல மடங்கு அதிகரித்து உள்ளதாலும், சாயத்தொழில் , தோல் தொழிலில் மிகப்பெரிய பாதிப்பு ஒன்றிய அரசால் ஏற்பட்டது. தமிழ்நாடு அரசால் மின் கட்டண உயர்வு பல மடங்கு அதிகரித்ததால் தொழில்கள் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டது . ஆகையால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி பெற தமிழ்நாடு அரசு உடனடியாக மின் கட்டண உயர்வை குறைத்திட வேண்டும் .சிறு நிறுவனங்களில் சாயத் தொழில் , தோல் தொழில் , செய்பவர்கள் இடத்தை வாடகைக்கு எடுத்து அந்த இடத்தில் தொழில் செய்கிறார்கள் , அந்த இடத்தில் போதிய வசதி இருக்காது , தொழில்கள் செய்ய வேண்டும் தொழிற்சாலை இருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்கப்பட வேண்டும் இது போன்ற சூழலில் தமிழ்நாடு அரசு சார்பில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட்டால் தொழில்கள் வளர்ச்சியாகும் . இதனால் உரிமையாளரும் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள் காரணம் தொழில் வளர்ச்சிக்காக வங்கியில் லோன் வாங்கி இருப்பது , தொழில் நடத்தக்கூடிய இடத்துக்கு வாடகை , மின் கட்டணம் போன்றவையாகும். . இதை நம்பி இருக்கின்ற தொழிலாளர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகிறார்கள் . தொழில் நடத்தக்கூடிய உரிமையாளரும் , தொழிலை நம்பி இருக்கின்ற தொழிலாளர்களும் , மேலும் மேலும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இறுதியில் தொழில் நடத்த முடியாமல் வங்கியில் லோன் வாங்கியதால் ஜப்தி செய்கிறார்கள் ,

இது சம்பந்தமாக ஜெய்பீம் மக்கள் கட்சியின் தோழர்கள ஆய்வு செய்த பொழுது நூற்றுக்கு 60% கம்பெனிகள் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிறது , பல நிறுவன உரிமையாளரும் - பல நிறுவனங்களில் பணி புரிகின்ற தொழிலாளர்களும் இருக்கின்ற பாதிப்புகளை விளக்க எங்களிடம் பேசினார்கள் . பல உரிமையாளர்கள் இன்று வேறு நிறுவனங்களில் தொழிலாளராக பணி புரிகின்ற சூழலில் இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் தொழில்கள் நல்லா இருந்தால் மட்டும் தான் இந்த நாடு வளம் பெறும் இந்த நாட்டில் வசிக்கக்கூடிய தொழிலார்களான மக்களும் வளம் பெறுவார்கள் , ஆகையால் சாயத் தொழில் ,தோல் தொழில் , மற்றும் விவசாயம் பாதுகாத்திட, வளர்ச்சி பெற, மக்கள் வளம் பெற, தொழில்கள் மீதான வரிகளை உடனடியாக ரத்து செய்திட கோரியும், மின் கட்டண உயர்வை குறைத்திட கோரியும், தொழிலாளர் வளர்ச்சிக்காக, தொழிற்சாலைகளுக்கு100% மானிய கடன் வழங்கிட கோரியும் ,ஜெய்பீம் மக்கள் கட்சி நிறுவனர்- தலைவர் அ.அ. அறிவழகன் தமிழ்நாடு அரசையும், ஒன்றிய அரசையும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

தமிழ்நாடு அரசு
**பேரூராட்சிகள் துறை, மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்**
**ந.க.எண். 51 / 2025 / நாள்: 25.03.2025**

தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 2024-2025 ஆம் நிதியாண்டில் அடிப்படை கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் போடி தேவாரம் சாலை (மங்கள கோம்பை முதல் வலுக்கு பாறை) செல்லும் சாலையில் கூவலிங்கம் ஆற்றில் பாலம் அமைத்தல் பணி மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரண்டு உறைகள் முறைகள்)

1. தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 2024-2025 ஆம் நிதியாண்டில் அடிப்படை கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ் போடி தேவாரம் சாலை (மங்கள கோம்பை முதல் வலுக்கு பாறை) செல்லும் சாலையில் கூவலிங்கம் ஆற்றில் பாலம் அமைத்தல் பணி மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக மின் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2. பணியின் மதிப்பீடு **ரூ.75.00 இலட்சம்**

3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **http://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | 27.03.2025 காலை 10.00 மணி முதல் 16.04.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 16.04.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 16.04.2025 மாலை 3.30 மணி |
| ஈ | முன் கலந்தாய்வு கூட்டம் | 08.04.2025 காலை 11.00 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

**செயல் அலுவலர்**
**மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.**
செ.ம.தொ.இ / 1208 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
**தேனி மண்டலம் - தேனி மாவட்டம், பேரூராட்சிகள் துறை**
**ந.க.எண். 0471 / 2025 / பேரூ1 / நாள்: 25.03.2025**

தேனி மண்டலம் தேனி மாவட்டம் பேரூராட்சிகளில் 2024-2025 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 8 (எட்டு) எண்ணம் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரண்டு உறைகள் முறைகள்)

1) தேனி மண்டலம் தேனி மாவட்டம் பூதிப்புரம்-1, கொங்குவார்பட்டி-1, அனுமந்தன்பட்டி-1, ஓடைப்பட்டி-1 பண்ணைப்புரம்-1, க.புதுப்பட்டி-1, தாமரைக்குளம்-1, மற்றும் வடுகபட்டி-1, ஆகிய பேரூராட்சிகளில் 2024-2025 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 8 (எட்டு) எண்ணம் கசடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

2. பணியின் மதிப்பீடு **ரூ.346.00 இலட்சம்**

3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **http://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் | 25.03.2025 காலை 10.00 மணி முதல் 28.04.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 28.04.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 28.04.2025 மாலை 3.30 மணி |
| ஈ | முன் கலந்தாய்வு கூட்டம் | 01.04.2025 காலை 11.00 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக இருப்பின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,**
**தேனி மண்டலம், தேனி - 31.**
செ.ம.தொ.இ / 1170 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு,
**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர்-602001.**
**கைபேசி எண். 89258 09213**
**ந.க.எண். 2274 / 2023 / அ.1** | **மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு** | **நாள் : 21.03.2025**

1) 2024-2025 ஆம் ஆண்டிற்கு மூலதன மானிய நிதியின் கீழ் திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 6 பேரூராட்சிகளில் (1.ஆரணி, 2. கும்முடிப்பூண்டி, 3. நாரவாரிக்குப்பம், 4. பள்ளிப்பட்டு, 5.திருமழிசை, 6. ஊத்துக்கோட்டை) 11 எண்ணிக்கையில் புதிய மின்கல வாகனங்கள் (Battery Operated Vehicles (BOV)) வாங்குவதற்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.
2) வேலையின் மதிப்பு ரூ.27.83 இலட்சம் (ரூபாய் இருபத்தி ஏழு லட்சத்து என்பத்து மூன்று ஆயிரம் மட்டும்)
3) ஒப்பந்தப்புள்ளி விபரங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம்.
4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை 27.03.2025 முதல் காலை 10.00 மணி முதல் www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5) ஒப்பந்தப்புள்ளி தொடர்பான முன் கலந்தாய்வு கூட்டம் (Pre-bid meeting) திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகம், 2வது தளம், திருவள்ளூர் - 602001 அலுவலகத்தில் வைத்து 04.04.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெறும்.
6) ஒப்பந்தப்புள்ளி ஆவணம் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி தேதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் ஆவணத்தை பதிவேற்றம்/ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 11.04.2025 அன்று மாலை 3.00 மணி வரை ஆகும்.
7) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 11.04.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.
8) பணியின் விபரம், மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./1197/ ஒப்பந்தப்புள்ளி / 2025
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம்.**

தமிழ்நாடு அரசு
**தொழில் நுட்பக்கல்வித்துறை, தொழில் நுட்பக் கல்வி வட்டம்,**
சென்னை – 600 025.
**முன்தகுதி மின்னணு மறு–ஒப்பந்தப்புள்ளி எண்.78 த.பொ/வ.அ.3/தொநுகவ/2024–25 நாள்: 25.03.2025**
**ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை / விலை விகித முறை (இருஉறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை–600 025 அவர்களால் பதிவுபெற்ற தகுதிவாய்ந்த பொதுப்பணித்துறை கட்டட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் 18% சேவை வரியுடன்) ரூபாய் இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன்வைப்பு தொகை மின்னணு முறையில் செலுத்தவேண்டிய செயற்பொறியாளர் |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20 வகுப்பறைகள், 2 கழிப்பறை தொகுப்புகள் கட்டுதல் மற்றும் 2 ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி. (2–ம் அழைப்பு) | 699.00 | 3,60,000/– 12 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், திருச்சி |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசிநாள் மற்றும் நேரம் : **08.04.2025 மாலை 3.00 மணிவரை** (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்)
3. மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (முதல் உறை) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **09.04.2025 மாலை 3.30 மணி அளவில்** (சர்வர் சிஸ்டம் கடிகாரம்)
4. மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள்– திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டும் வெளியிடப்படும்.

**தலைமைப் பொறியாளர், பொபது,**
**தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025.**
செ.ம.தொ.இ./1175/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு**
**( மொத்த தொகை – இனவிலை முறை )**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். NIT : 43 / 2024–25/கட்டட (க&ப) வட்டம் / ஈரோடு / நாள். 25.03.2025**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், ஈரோடு, அவர்களால் தமிழ்நாடு பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து கரூர் மாவட்டம் சார்ந்த ஒரு பணி (வகுப்பு III மற்றும் அதற்கு மேலும்) மற்றும் நாமக்கல் மாவட்டம் சார்ந்த ஒரு பணிக்கான (வகுப்பு IV மற்றும் அதற்கு மேலும்) இனவிலை முறை மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. கரூர் மாவட்டத்தில் ஒரு பணி மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் ஒரு பணிக்கான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு விபரம், பணி விபரம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2. | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 03.04.2025 முதல் 16.04.2025 மாலை 03.00 மணி வரை |
| 3. | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 16.04.2025 மாலை 3.00 மணி வரை |
| 4. | ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 16.04.2025 மாலை 3.30 மணி அளவில் |

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,**
**கட்டட (க & ப) வட்டம், ஈரோடு – 11.**
செ.ம.தொ.இ/1178/ஒப்பந்தப்புள்ளி/2025

**Enrolment Notice**

After ten days of the publication of this notice and within three months thereafter I, K.ARUN KUMAR S/o. V,KRISHNAN Aged about 27years, residing at No. 190 SASTHRI NAGAR 10TH STREET PULIANTHOPE, CHENNAI. Pin.600012. Intend having my enrollment as an Advocate moved before the Bar Council Of Tamil Nadu Bar Council Building, High Court Campus, Chennai - 600104. Those who have any valid objections may notify the same to the Bar Council Within 10 days.

K.ARUN KUMAR

BEFORE THE HON'BLE III SMALL CAUSE COURT AT CHENNAI
MP No. 1 of 2024 IN
O.P.No. 1200 of 2019

N. Rajasekar ...Petitioner/Petitioner.
-Vs-
1. M. Vaseegaran
2. P. Sriranjan ...Respondents/Respondents.

To,
R1 M. Vaseegaran,
S/o. Manoharan,
No. 67, 35th Azad Street,
GKM Colony, Chennai – 600 082.
To,
R2 P. Sriranjan,
S/o. V. Prabhakaran,
Block L1 Flat No. 4, 4th floor,
L 1 FTH Minerva, Nolambur
Chennai – 600095.

Take notice that the above matter was came up for hearing before the Hon'ble III small cause court on 19-03-2025 in which his Honour was pleased to order paper publication to you returnable by 23-04-2025. Hence you are given notice that you should present before the Hon'ble III small cause court in person or through pleader on 23-04-2025 at 10.15 a.m. failing which the matter will be decided in your absence.

B.LOGENDIRAN
Counsel for Petitioner.

BEFORE THE HON'BLE DISTRICT MUNSIF JUDGE
AT SHOLINGANALLUR
I.A.No.2 of 2024 In
O.S.No. 280 Of 2024

S.Harish ....... Plaintiff
-Vs-
1)S.Kannan
2)R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development ........ Defendants

To
D2) R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development
No.4/146, Medavakkam Main Road,
Periyar Nagar, Vellakal,
Chennai - 600 100

Madam,
Please take notice that the above said original suit has been filed against you for Permanent Injunction and the same has been posted for your appearance on 15.04.2025 before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. Hence, you have to appear before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. in person or through your counsel, failing which the same will be heard and decided in your absence.

Mr.G.SURESH
ADVOCATE FOR PLAINTIFF

BEFORE THE HON'BLE DISTRICT MUNSIF JUDGE
AT SHOLINGANALLUR
I.A.No.2 of 2024 In
O.S.No. 281 Of 2024

S.Hemachnadran ....... Plaintiff
-Vs-
1)S.Kannan
2)R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development ........ Defendants

To
D2) R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development
No.4/146, Medavakkam Main Road,
Periyar Nagar, Vellakal,
Chennai - 600 100

Madam,
Please take notice that the above said original suit has been filed against you for Permanent Injunction and the same has been posted for your appearance on 15.04.2025 before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. Hence, you have to appear before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. in person or through your counsel, failing which the same will be heard and decided in your absence.

Mr.G.SURESH
ADVOCATE FOR PLAINTIFF

BEFORE THE HON'BLE DISTRICT MUNSIF JUDGE
AT SHOLINGANALLUR
I.A.No.2 of 2024 In
O. S.No. 279 Of 2024

Murugan ....... Plaintiff
-Vs-
1) S.Kannan
2) R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development ........ Defendants

To
D2) R.Veeralakshmi
Managing Director of
M/s.Sun Homes Property
Management & Development
No.4/146, Medavakkam Main Road,
Periyar Nagar, Vellakal,
Chennai - 600 100

Madam,
Please take notice that the above said original suit has been filed against you for Permanent Injunction and the same has been posted for your appearance on 15.04.2025 before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. Hence, you have to appear before the Hon'ble District Munsif Judge at Sholinganallur at 10.30 A.M. in person or through your counsel, failing which the same will be heard and decided in your absence.

Mr.G.SURESH
ADVOCATE FOR PLAINTIFF

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### அதிகபட்ச ரன்கள் குவிப்பு:
# அகமதாபாத் மைதானத்தில் பஞ்சாப் அணி புதிய சாதனை



**அகமதாபாத், மார்ச் 27-**
நடப்பு ஐ.பி.எல். தொடரின் 5-வது லீக் ஆட்டம் அகமதாபாத்தில் நடைபெற்றது. இதில் பஞ்சாப் அணி அதிகபட்சமாக அகமதாபாத் மைதானத்தில் 243 ரன்கள் குவித்து புதிய சாதனை படைத்துள்ளது.

**5-வது லீக் ஆட்டம்...**
10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடைபெற்ற 5-வது லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற குஜராத் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 243 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் 97 ரன்கள் எடுத்தார். குஜராத் தரப்பில் சாய் கிஷோர் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**அதிகபட்ச ரன்கள்...**
அகமதாபாத் மைதானத்தில் டி20 கிரிக்கெட் போட்டிகளில் ஒரு அணி குவித்த அதிகபட்ச ரன் (243 ரன்கள்) இது வாகும். இதற்கு முன்னர் நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா 234 ரன்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முந்தியுள்ள பஞ்சாப் கிங்ஸ் புதிய வரலாறு படைத்துள்ளது. இதையடுத்து 244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய குஜராத் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 232 ரன்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் பஞ்சாப் அணி 11 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்தது. குஜராத் தரப்பில் அதிகபட்சமாக சாய் சுதர்சன் 74 ரன்கள் அடித்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

### கடைசி டி-20 போட்டியில்
# பாகிஸ்தானை வீழ்த்தி நியூசி., அபார வெற்றி




**வெல்லிங்டன், மார்ச் 27-**
கடைசி டி-20 போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்று தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

**சுற்றுப்பயணம்...**
பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடைபெற்றது. இந்த தொடரின் முதல் 4 போட்டிகள் முடிவில் 3-1 என்ற கணக்கில் நியூசிலாந்து முன்னிலையில் இருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 5வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது.

**சல்மான் ஆகா...**
இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான், நியூசிலாந்தின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 128 ரன்கள் மட்டுமே எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சல்மான் ஆகா 51 ரன்கள் எடுத்தார்.

**டிம் செய்பர்ட்...**
நியூசிலாந்து தரப்பில் ஜேம்ஸ் நீஷம் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதையடுத்து 129 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்தின் தொடக்க வீரர்களாக டிம் செய்பர்ட் மற்றும் பின் ஆலென் களம் இறங்கினர். இதில் பின் ஆலென் 27 ரன்னிலும், மார்க் சாம்ப்மென் 3 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து டேரில் மிட்செல் களம் புகுந்தார். மறுபுறம் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய டிம் செய்பர்ட் சிக்சர் மழை பொழிந்தார்.

**131 ரன்கள் எடுத்து..**
இதன் காரணமாக நியூசிலாந்து அணி வெறும் 10 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 131 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக டிம் செய்பர்ட் 97 ரன்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 4-1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி வரும் 29ம் தேதி நடக்கிறது.

# ஐ.பி.எல். புள்ளி பட்டியல்:

கடந்த 22-ம் தேதி தொடங்கிய 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் இதுவரை 5 லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. அதன்படி அனைத்து அணிகளும் தங்களும் முதல் லீக் ஆட்டத்தில் விளையாடி விட்டன.
இதில் ஐதராபாத், பெங்களூரு, பஞ்சாப், சென்னை மற்றும் டெல்லி அணிகள் தங்களது முதல் லீக் ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளன. இருப்பினும் ரன்ரேட் அடிப்படையில் ஐதராபாத் முதலிடத்திலும், பெங்களூரு 2-வது இடத்திலும், பஞ்சாப் 3-வது இடத்திலும், சென்னை 4-வது இடத்திலும், டெல்லி 5-வது இடத்திலும் உள்ளன.
தங்களது முதல் ஆட்டங்களில் லக்னோ, மும்பை, குஜராத், கொல்கத்தா மற்றும் ராஜஸ்தான் அணிகள் தோல்வியடைந்துள்ளன. அதன் முடிவில் லக்னோ 6-வது இடத்திலும், மும்பை 7-வது இடத்திலும், குஜராத் 8-வது இடத்திலும், கொல்கத்தா 9-வது இடத்திலும் மற்றும் ராஜஸ்தான் 10-வது இடத்திலும் உள்ளன.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஐதராபாத் | 1 | 1 | 0 | 2 | +2.200 |
| 2 | பெங்களூரு | 1 | 1 | 0 | 2 | +2.137 |
| 3 | பஞ்சாப் | 1 | 1 | 0 | 2 | +0.550 |
| 4 | சென்னை | 1 | 1 | 0 | 2 | +0.493 |
| 5 | டெல்லி | 1 | 1 | 0 | 2 | +0.371 |
| 6 | லக்னோ | 1 | 0 | 1 | 0 | -0.371 |
| 7 | மும்பை | 1 | 0 | 1 | 0 | -0.493 |
| 8 | குஜராத் | 1 | 0 | 1 | 0 | -0.550 |
| 9 | கொல்கத்தா | 1 | 0 | 1 | 0 | -2.137 |
| 10 | ராஜஸ்தான் | 1 | 0 | 1 | 0 | -2.200 |

## இன்றைய ஐ.பி.எல் (7-வது லீக்)



**அணிகள் - ஐதராபாத் vs லக்னோ**
**இடம் - ஐதராபாத் மணி - இரவு 7.30**

# தாம்பரம்: கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்: அமைச்சர் தகவல்

**சென்னை, மார்ச் 27-**
தாம்பரம் தொகுதி கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்துவதற்கு பரிசீலனை செய்து பணிகள் மேற்கொள்ளப்படும் என்று நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு தெரவித்துள்ளார்.
தாம்பரம் தொகுதி கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று தாம்பரம் எம்.எல்.ஏ. எஸ்.ஆர். ராஜா சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்து பேசிய நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:
தாம்பரம் தொகுதி கிஷ்கிந்தா சாலையில் 1.4 கி.லோ மீட்டர் வலது பக்கம் வனத்துறை பகுதியாகவும் இடப்பக்கம் குடியிருப்பு பகுதியாகவும் இருக்கிறது. 4 வழிச்சாலையாக மாற்ற வனத்துறை அனுமதி பெறவும், விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யவும், அதன் அடிப்படையில் பணிகளை பரிசீலனை செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. 7.2 கிலோமீட்டர் சாலை போக்குவரத்து அடர்த்தியின் அடிப்படையில் நான்கு வழிசாலையாக அகலப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருப்பதிக்கு இணையாக திருச்செந்தூர் மாறும்
### அமைச்சர் சேகர்பாபு தகவல்

**கோவை, மார்ச் 27-**
திருப்பதிக்கு இணையாக திருச்செந்தூர் மாறும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.
திருச்செந்தூர் கோயிலுக்கு நாடு முழுவதும் இருந்து பக்தர்களும் யாத்ரீகர்களும் ஆண்டு முழுவதும் வருகிறார்கள். இங்கு குடிநீர், கழிவறை, தங்கும் இடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தருமாறு பக்தர்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோயிலில் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார். அப்போது விரைவில் குடமுழுக்கு நடத்துவது உள்ளிட்ட கோயில் சீரமைப்பு பணிகள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. இதையடுத்து அமைச்சர் சேகர் பாபு செய்தியாளர்களை சந்தித்தார்.
அப்போது அவர் கூறுகையில் திருச்செந்தூர் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக குடிநீர் உள்ளிட்ட வசதிகள் விரைவாக செய்து முடிக்கப்படும். பக்தர்கள் தங்கும் வசதிக்காக யாத்ரி நிவாஸ் கட்டப்படுகிறது. அதன் முகப்பு வடிவம் சாதாரணமாக இருக்கிறது. அதை பிரம்மாண்டமாக வடிவமைக்க கூறி உள்ளேன். திருச்செந்தூர் புகழை நாடு முழுவதும் கொண்டு சேர்க்க திருப்பதிக்கு இணையாக மேம்படுத்துவதற்காக மாஸ்டர் பிளான் தயாரிக்கவும் அறிவுறுத்தியிருக்கிறேன்.
கோயிலுக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அதை அகற்றவும் ஒழுங்குமுறைப்படுத்தவும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் மக்கள் பயன்பாட்டுக்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்குவது பற்றியும் திட்டமிடப்பட வுள்ளது. பக்தர்கள் அதிக நேரம் காத்திருக்காமல் விரைவாக தரிசனம் செய்யவும் தேவையான ஏற்பாடுகளை செய்யும்படி அறநிலையத் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார் அமைச்சர் சேகர்பாபு.

# 12,114 சுயமரியாதை திருமணங்கள் தற்போது வரை பதிவு: அமைச்சர்

**சென்னை, மார்ச் 27-**
2018-ம் ஆண்டு முதல் தற்போது வரை 12,114 சுயமரியாதை திருமணங்கள் பதிவு செய்யப்பட்டதாக அமைச்சர் மூர்த்தி தெரிவித்துள்ளார்.
சட்டசபையின் நேற்றைய கேள்வி நேரத்தின்போது சட்டமன்ற உறுப்பினர் எழிலன்: நிலத்தை வாங்கும் போதோ, விற்கும் போதோ வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்புக்கு இடையே வித்தியாசம் இருப்பதால் சில பேர் நிலத்தை விற்க முடியாமலும் அரசுக்கு வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அமைச்சர் மூர்த்தி, விவசாய நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள் ஆகியவற்றின் வழிகாட்டு மதிப்பு முரண்பாடுகளை சீர்படுத்தும் நோக்கிலும், உண்மையான சொத்து மதிப்பினை ஆய்வு செய்யவும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் சிறப்பு உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினர் அத்தகையை இடங்களுக்கு நேரில் சென்று கள ஆய்வு சென்று, வழிகாட்டு மதிப்பை ஆராய்ந்து பதிவுத்துறை தலைவருக்கு அறிக்கை அளிக்கும்.
அந்த அறிக்கையானது மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையிலான துணைக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட பின்னால் பதிவுத்துறை தலைவர் தலைமையிலான மையக்குழுவின் ஜெனரல் வால்யூவேஷன் கமிட்டி ஒப்புதல் பெறப்பட்டு முரண்பாடுகள் களையப்பட்டு வழிகாட்டி மதிப்புகள் சீரமைக்கப்படும் என்று தெரிவித்தார். சட்டமன்ற உறுப்பினர் எழிலன்: திருமணம் என்பது மானுட ஒப்பந்தம் என்று சொன்னார் புத்தர். இந்த அடிப்படையில் புரோகித, ஜாதி, சடங்குகள் மறுப்பு என்று சுயமரியாதை திருமணத்தை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் தந்தை பெரியார்.
1925 முதல் நடந்த சுயமரியா தைதிருமணங்களுக்கு 1968 இல் தமிழ்நாடு அரசால் அனைத்து சுயமரியாதை திருமணங்களுக்கு அங்கீகாரம் தந்தவர் அண்ணா. 2020-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தமிழ்நாட்டில் நிறைவேற்றிய சுயமரியாதை திருமணத்தை பாராட்டி பெற்றோர்கள் அனுமதி தேவையில்லை, பொது வெளியில் திருமணம் செய்ய தேவையில்லை. உகந்த சான்றிதழ்கள் கொடுத்தால் திருமணத்தை பதிவு செய்ய வேண்டும் என சட்ட முன் நடவடிக்கை கொடுத்துள்ளது. ஆனாலும், சுயமரியாதை திருமணம் செய்வதற்கு சில சார்பதிவாளர்கள் சமூக சூழல் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இடர்பாடுகளை செய்வதாகவும், ஆணோ, பெண்ணோ பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றால் பலவகையான தடைகளை ஏற்படுத்தும் நிலை ஏற்படுகிறது. இந்த வரலாற்று பின்னணியும் சமூக பின்னணியும் குறித்து சார் பதிவாளர்களுக்கு போதிய விழிப்புணர்வு கொடுக்க வேண்டும். திருமணம் முடித்தவர்கள் ஆன்லைன் மூலம் விசா பிரச்சனையின்றி வெளிநாட்டிற்கு செல்வதற்கு ஏதுவாக ஆன்லைன் மூலம் திருமண பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார்.
இதற்கு பதிலளித்த அமைச்சர் மூர்த்தி, சுயமரியாதை திருமணம் குறித்து 1955-ம் ஆண்டு இந்து திருமண பதிவு சட்டத்தின்படி சுயமரியாதை திருமணம் சேர்க்கப்பட்டு தற்போது வரை சார்பதிவாளர் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 2018ம் ஆண்டு முதல் தற்போது வரை 12,114 சுயமரியாதை திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சுயமரியாதை திருமணம் குறித்து பதிவுத்துறை பயிற்சி நிலையம் மூலமாக பதிவுத்துறை அனைத்து பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
பதிவுத்துறை இணையதள பக்கத்தில் உள் சென்று திருமண பதிவிற்கு தேவையான அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து அதற்கு உரிய கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பம் உருவாக்கப்படும். அதனை அச்சு பிரிதி எடுத்து திருமண பதிவிற்கு பயன்படுத்திக்கொள்ளலாம். பின்னர் இணையதளம் வழியாக பதிவு செய்வதற்கான நாள் மற்றும் நேரத்தினை முன்பதிவு செய்து ஒப்புகை சீட்டை பெறலாம். மேலும், பதிவு செய்யப்பட்ட திருமண சான்றிதழ்கள் திருத்தம் தேவைப்படின் பதிவு துறை அலுவலகங்களுக்கு நேரிலே வராமல் இணையம் வழியாகவே விண்ணப்பித்து திருத்திய சான்றுகளை பெறும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

### வரும் 29-ம் தேதி மத்திய அரசுக்கு எதிராக
# தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. ஆர்ப்பாட்டம்

**சென்னை, மார்ச் 27-**
100 நாள் வேலை திட்டம் மூலம் தமிழகத்துக்கு தர வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை மத்திய அரசு தராததற்கு தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ளது.
தி.மு.க. பொதுச்செயலாளர் துரை முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், 09-03-2025 அன்று காலை, சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற "தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, "தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை மத்திய அரசிடம் பெற வேண்டும்" என்றும்; அத்துடன் 'மத்திய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காதது' குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.
கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, மத்திய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் - தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன் பெறுவோரைத் திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.
மாவட்டக் கழக நிர்வாகிகள் - கழக பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, மத்திய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் மத்திய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு உடனே தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியை இறுதி செய்வோம்
### அமித்ஷா சந்திப்பு குறித்து இ.பி.எஸ். விளக்கம்



**டெல்லி, மார்ச் 27-**
அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியை இறுதி செய்வோம் என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக கூறியுள்ளார்.
தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட தொடங்கி விட்டன. இந்த நிலையில், தமிழ்நாடு அரசியலில் திடீர் திருப்பமாக டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி, மத்திய அமைச்சர் அமித்ஷாவை நேற்று முன்தினம் இரவு சந்தித்து பேசினார். இதன் மூலம் மீண்டும் அ.தி.மு.க.- பா.ஜ.க. இடையே கூட்டணி ஏற்படுமா? என்ற எதிர்பார்ப்பு நிலவியது.
இந்த நிலையில், டெல்லி விமான நிலையத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- தமிழ்நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மத்திய அமைச்சர் அமித்ஷாவிடம் விவாதித்தோம். தமிழக திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யவும் வலியுறுத்தினோம். தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே தொடர வேண்டுமென அமித்ஷாவிடம் வலியுறுத்தினேன். மும்மொழிக் கொள்கையை திணிக்க கூடாது. தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாடு பாதிக்கப்படக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது; அப்படி மேற்கொண்டால் நியாயமான முறையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ள வேண்டும்.
மேகதாது, முல்லைப்பெரியாறு அணை விவகாரங்களிலும் நடவடிக்கை கோரியும், தமிழகத்தில் டாஸ்மாக் ஊழலை முழுமையாக விசாரிக்க கோரியும் வலியுறுத்தினோம். தமிழகத்தில் நடக்கும் சட்டம் ஒழுங்கு, பாலியல் வன்கொடுமைகள் பிரச்சினைகள் குறித்தும் அமித்ஷாவிடம் தெரிவித்தோம். அ.தி.மு.க. அலுவலகத்தை பார்வையிடவே வந்தேன். நேரம் கிடைத்தால் அவரை பார்க்கலாம் என்று இருந்தோம். அதன்படி, நேரம் ஒதுக்கப்பட்டதும் 45 நிமிடம் ஒவ்வொரு பிரச்சினைகளை விரிவாக எடுத்துரைத்து அவரிடம் பேசினோம்.
கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை, முழுக்க முழுக்க மக்கள் பிரச்சினையை பேசுவதற்கு தான் அமித்ஷாவை சந்தித்தேன். கூட்டணி என்பது வேறு, கொள்கை என்பது வேறு. எங்களது கொள்கை எப்போதும் நிலையாக இருக்கும். கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் முடிவு செய்யப்படுவது, தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ளது. கூட்டணி என்பது சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறும். தேர்தல் நேரத்தில் என்ன சூழ்நிலை இருக்குதோ, அதை பொறுத்தே கூட்டணி மாறும். கூட்டணி இருக்கு இல்லை என்பதை இப்போது சொல்ல முடியாது. அரசியல் சூழலுக்கு ஏற்றவாறு கூட்டணியை இறுதி செய்வோம். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி மக்கள் பிரச்சினைகளை பேசி தீர்வு காணும் கட்சி அ.தி.மு.க.. இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் உள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை: அமைச்சர் கே.என்.நேரு

**சென்னை, மார்ச் 27-**
திருப்பூரில் உள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.
தமிழக சட்டசபையின் நேற்றைய கேள்வி நேரத்தின் போது, திருப்பூரில் 1 லட்சம் டன் திடக்கழிவுகள் கொட்டி கிடப்பதாக தகவல் வருகிறது. எனவே அவற்றை அகற்ற அரசு வழிமுறைகளை செய்யுமா என்று சட்டமன்ற உறுப்பினர் கொங்கு ஈஸ்வரன் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு, குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் கோவையில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கான குப்பைகளை கோவையில் இருந்து மட்டுமல்லாமல் அருகில் இருந்தும் கொண்டு செல்ல வேண்டும். கோவையில் தொடங்கும்போது திருப்பூரில் உள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.
தொடர்ந்து கள்ளக்குறிச்சி நகராட்சியில் கழிவுகளை கொட்ட நிரந்தரமாக இடம் தேர்வு செய்து தர அரசு முன்வருமா என்று கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு, ஏற்கனவே அங்கு 4 ஏக்கரில் குப்பை கொட்டும் இடத்தில் பயோ மைனிங் முறையில் குப்பை பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் குப்பைகளை ஊருக்கு வெளியே கொட்டும் வகையில் இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கூறினார்.

# தமிழகத்தில் ரேஷன் கடைகள் வரும் 29-ம் தேதி இயங்கும்

**சென்னை, மார்ச் 27-**
தமிழகத்தில் ரேஷன் கடைகள் வருகிற 29-ந்தேதி வழக்கம்போல் இயங்கும் என்று உணவு பொருள் வழங்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளது.
தமிழ்நாடு உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை இயக்குனரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-
ரேஷன் கடைகளில் மாதத்தின் கடைசி பணி நாளன்று, ஒத்திசைவு பணிகள் மேற்கொள்ளப்படுவதால், அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுவதில்லை. இந்த மாதத்தின் கடைசி பணி நாளான 29-ந் தேதி, சனிக்கிழமையாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து வருகிற 30-ந்தேதி தெலுங்கு வருடப் பிறப்பு மற்றும் 31-ந்தேதி ரம்ஜான் பண்டிகையினை முன்னிட்டு, ரேஷன் கடைகளுக்கு விடுமுறை நாட்களாகும். இந்த மாதத்தின் கடைசி 2 நாட்கள் ரேஷன் கடைகளுக்கு பொது விடுமுறை நாட்களாக வருவதால், குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி, வருகிற 29-ந் தேதி அனைத்து ரேஷன் கடைகளும் செயல்பட்டு, வழக்கம்போல் அத்தியாவசிய பொருட்கள் வினியோகம் செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி



**மேலூர், மார்ச் 27-**

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் த்தின் பொதுச் செயலாளர் எடப் பாடி கே. பழனிச்சாமி அவர் களின் ஆணைக்கிணங்கவும், அமைப்புச் செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் வி.வி.ரா ஜன் செல்லப்பா எம்.எல்.ஏ அறிவுறுத்தலின்பேரில், ம துரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலா ளரும், மேலூர் பி. பெரியபுள் ளான் என்ற செல்வம் எம். எல்.ஏ ஆலோசனையின் பேரில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்ட கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய த்தின் சார்பில் வரு கின்ற 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தல் பூத் கமிட்டி அமைத்ததை ஆய்வு செய் யும் பணியினை அமைப்புச் செயலாளரும், முன்னாள் ஆவின் தலைவர் தஞ்சை ஆர்.காந்தி ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அவை தலைவர் எஸ்.என்.ரா ஜேந்திரன் வரவேற்புரையாற் றினார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் முன் னாள் எம்.எல்.ஏ கே.தமிழர சன் முன்னிலை வகித்தார் . கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளரும், முன் னாள் யூனியன் வைஸ் சேர் மன் குலோத்துங்கன் தலைமை தாங்கினார். கொட் டாம்பட்டி வடக்கு ஒன்றியத் திற்கு உட்பட்ட கொட்டாம் பட்டி, வலைச்சேரிபட்டி, சொக்கம்பட்டி, பொட்டப் பட்டி, பள்ளபட்டி, மணப்பச் சேரி,

தொந்திலிங்கபுரம், பாண் டங்குடி, சொக்கலிங்கபுரம், அய்யாபட்டி, 18 நிர் சுக்காம் பட்டி, சூரப்பட்டி, குன்ன ராம்பட்டி ஆகிய ஊராட்சிக ளில் பூத் கமிட்டி நிர்வாகி களை அறிமுகப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மா வட்ட மீனவர் அணி செயலா ளர் பள்ளபட்டி முருகேசன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் லெட்சு மணன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செய லாளர் அன்புச்செல்வன், முன்னாள் மாவட்ட கவுன்சி லர் ராஜலெட்சுமி ஆனந்தன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் ராஜமாணிக்கம், ஒன்றிய துணைச் செயலாளர் சதாசிவம், பொருளாளர் சேதுராமன்,

எம்.ஜி.ஆர் மன்றச் செய லாளர் நயினான், பாசறை செயலாளர் நிர்வாகிகள் செய லாளர் காசிநாகூர், ராமச்சந்தி ரன், ஐடிவிங் செயலாளர் மெய்யன், மீனவரணி செய லாளர் ராஜேந்திரன், கொட் டாம்பட்டி வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், கிளை செயலா ளர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் கலை சங்கமம் கிராமிய கலை நிகழ்ச்சி




**ராமநாதபுரம்,மார்ச் 27-**

ராமநாதபுரத்தில் கலை சங்கமம் கிராமிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ராம நாதபுரத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தின் கலை சங்கமம் கிராமிய கலை நிகழ்ச்சி நடைபெற் றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் பங்கேற்று கிராமிய கலை நிகழ்ச்சி களை பார்வையிட்டதுடன் கலைச் சங்கமம் கலைக்குழு வில் உள்ள கிராமிய கலை ஞர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி பாராட்டினார்.

அ த னைத் தொ டர்ந்து கிராமிய கலை நிகழ்ச்சியான கரகாட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு நாட் டுப்புற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி யில் சுமார் 100-க்கும் மேற் பட்ட கிராமிய கலைஞர்கள் பங்கு கொண்டு சிறப்பித்த னர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் கோட் டாட்சியர் இராஜமனோக ரன், கலைச்சங்கம கிராமிய கலைக்குழுவின் ஒருங்கி ணைப்பாளர்கள் மருங்கன், முருகன் மற்றும் நாட்டுப்புற கிராமிய கலை சங்கமத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக்குழுக்கு 200 ஆடுகள்: கலெக்டர் ஜெயசீலன் வழங்கினார்



**விருதுநகர், மார்ச் 27-**

மகளிர் சுய உதவிக்குழுக் களுக்கு 200 ஆடுகளை கலெக்டர் ஜெயசீலன் வழங் கினார்.

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நல்லுக்குறிச்சி கிராமத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார் பில், ஆடு வளர்ப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், ஊராட்சி அளவிலான கூட்ட மைப்பில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த தீவனம் உற்பத்தி செய்வதற் கான நிலமுள்ள 20 பெண்க ளுக்கு தலா 10 ஆடுகள் வீதம் என மொத்தம் ரூ.14 இலட் சம் மதிப்பில் 200 ஆடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் வழங்கினார்.

பின்னர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அமுத சுரபி நிதியின் கீழ், ரூ.36.40 இலட்சம் மதிப்பிலான கட னுதவி களை மாவட்ட கலெக்டர் வழங்கினார். பின் னர் அவர் கூறியதாவது:-

இன்றைக்கு சந்தையில் ஆடுகளுக்கான தேவை மிகப்பெரிய அளவில் இருக் கிறது. நீங்கள் அனைவரும் இன்றைக்கு ஒரு 10 ஆடுகள் வாங்கி, அதில் நீங்கள் ஒரு வருடம் உங்களினுடைய முழுமையான உழைப் பினை செலுத்துகிறீர்கள் என் றால் நிச்சயமாக ஒரு ஆண்டில் 10 ஆடுகள் 30 ஆடுகளாக பெருகக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறது. மேலும், ஒரு ஆண்டுகள் பராமரித்தால் நீங் கள் அனைவரும் ஒரு ஆட் டுப்பண்ணையின் உடைய முதலாளியாக மாறக்கூடிய வாய்ப்புகள் கூட இருக்கி றது. எனவே, இதற்கு நீங்கள் ஒரு இரண்டு ஆண்டுக்காலம் ஆடுகளை சரியாக பராம ரித்து உங்களினுடைய உழைப்பை செலுத்தினீர்கள் என்றால் இரண்டு ஆண்டு காலத்தில் உங்களின் உடைய குடும்பம் பொருளாதாரம் முன்னேறக்கூடிய அளவிற்கு வருமானத்தை தொடர்ச்சி யாக பெற முடியும். எனவே, இது போன்ற விழிப்புணர்வு களை பெற்று, கல்வி வாய்ப் புகளை பெற்று, பொருளா தார வாய்ப்புகளை பெற்று, வாழ்க்கையில் எவ்வளவு உரிமைகள் இருந்தாலும் பொருளாதார வலிமை தான் மிகவும் முக்கியம் எனவும், பெண்கள் அனைவரும் தொழில்களில் வெற்றி பெற்று பெரிய தொழில் முனைவோர்களாக முன் னேற வேண்டுமென தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் ஜே.ஜார்ஜ் மைக் கேல், உதவி திட்ட அலுவ லர்கள், மகளிர் சுய உதவிக்கு ழுக்களை சேர்ந்த பெண்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண் டனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# நத்தம் அருகே மல்லி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்



**நத்தம், மார்ச் 27-**

நத்தம் அருகே மல்லி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பன்னியாமலை யில் மல்லி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. இதில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி நான் காம் ஆண்டு மாணவிகள் கலந்து கொண்டு ஊராட்சி பணி திட்டத்தின் கீழ் நிலத்தின் குறிப்பிட்ட இடங்களில் மல்லி சாகுபடி செய்வது குறித்தும் சாகுபடி செய்வதால் உண்டாகும் வருமானம் குறித்தும் விவசாயிகளுக்கு செயல்முறை விளக் கம் அளித்தனர். இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# மேலூரில் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி இப்தார் விருந்து



**மேலூர், மார்ச் 27-**

மேலூரில் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி இப்தார் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரை மாவட்டம் மேலூர் நகாரட்சிக்கு உட்பட்ட மலம் பட்டி அருகே பொன்மலைநகரில் உள்ள தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பில் இப்தார் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பகுதியில் உள்ள அனைத்து சமுதாய மக்கள் ஒன்றிணைந்து சமூக நல்லிணக் கத்தை வலியுறுத்தி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அனைத்து தரப்பு மக்களும் கலந்துக் கொண்டு தொழுகை நடத்தி வழி பட்டனர். தொடர்ந்து அவர்களுக்கு நோன்பு கஞ்சி, பழங்கள், மற்றும் ரோஸ் மில்க் உள்ளிட்ட உணவுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொன்மலை நகர் அடுக்குமாடி குடியிருப்பு மக்கள் மற்றும் இளைஞர்கள் செய்திருந்த நிலை யில், சாதி மதங்களை கடந்து அனைத்து தரப்பு மக்களும் கலந் துக் கொண்டது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# நத்தம் அருகே கார்–மினிவேன் நேருக்கு நேர் மோதி விபத்து





**நத்தம், மார்ச் 27-**

நத்தம் அருகே கார்-மினிவேன் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளானது.

திருநெல்வேலியை சேர்ந்தவர் ஆனந்தஜெயசீலன்(38).இ வர் நேற்று காலை மினிவேனில் காரைக்குடியில் இருந்து முறுக்குகள் ஏற்றிக் கொண்டு திண்டுக்கல்லுக்கு சென்று கொண்டிருந்தார். நத்தம் அருகே ஏரக்காபட்டி பகுதியில் வந்து கொண்டிருந்த போது எதிரே மதுபோதையில் மேலூர்- அலங் கம்பட்டியை சேர்ந்த சின்னத்தம்பி (46) என்பவர் ஓட்டி வந்த கார் நேருக்கு நேர் மோதியது. இதில் கார் இடது பக்கமும் , வேன் வலது பக்க மின்கம்பத்திலும் மோதி நின்றது. இந்த விபத்தில் கார் மற்றும் வேனின் முன்பக்கம் முற்றிலும் சேத மடைந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயமில்லை. இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப் -இன்ஸ்பெக்டர் அருள்கு மார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# சொத்து பிரச்சனையில் உறவினரை வெட்டிய வழக்கில் வாலிபருக்கு 7 ஆண்டு தண்டனை

**விருதுநகர், மார்ச் 27-**

சொத்து பிரச்சனையில் உறவினரை வெட்டிய வழக்கில் வாலிபருக்கு 7 ஆண்டு தண்டனையை கோர்ட்டு உத்தரவிட் டுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே சொத்து பிரச்சனை தொடர்பாக உறவினர்களை வெட்டிய வழக்கில் வாலிபருக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் ரூ.16,000 அபராதம் விதிக்கப்பட் டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ளது அச்சம் தவிர்த்தான் அந்த ஊரைச் சேர்ந்தவர் வீரலட்சுமி மற்றும் அவரது கணவர் சற்குணம் சற்குணத்தின் அம்மா முத்துலட்சுமி ஆகியோரை சொத்து பிரச்சனை காரணமாக கலந்த 2023-ம் ஆண்டு அதே பகுதியை சேர்ந்த உறவினர் விஜயகுமார் வயது 24 மற்றும் வீராசாமி வயது 59 ஈஸ்வரி 53 ஆகியோர் அரிவாளால் வெட் டியதாக வீரலட்சுமி வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் வன்னியம்பட்டி போலீ சார் மூன்று பேர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

மேலும் இது தொடர்பான வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி பகவதி அம் மாள் சொத்து பிரச்சினைகளாக காரணமாக மூவரை வெட் டிய விஜயகுமாருக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை ரூ.16 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். வீராசாமி மற்றும் ஈஸ்வரி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

# சிந்துபட்டி வெங்கடாஜலபதி பெருமாள் கோவில் அறங்காவலர்கள் நியமனம்

**திருமங்கலம், மார்ச் 27-**

சிந்துபட்டி ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமாள் கோவிலுக்கு அறநிலையத்துறை சார்பில் அறங்காவலர்கள் நியமனம் செய் யப்பட்டு அவர்களுக்கு அறநிலையத்துறை உதவி ஆணையர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.அதன்படி கோவிலின் புதிய அறங்காவலர்களாக சின்னச்சாமி,ஜெயப்பிரகாஷ்,தங்க ராஜ்,குமுதா,காளியம்மாள் ஆகியோர் நியமனம் செய்யப்பட் டனர். இவர்களில் தங்கராஜ் என்பவர் அறங்காவலர் குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இவர்களது பதவியேற்பு நிகழ்வு முடிந்தபின்னர் செயல் அலுவலர் இளமதியுடன் அறங்காவலர் குழுவினர் பிரம் மோற்சவ விழா குழுவினர் திருத்தேர் பவனி வரும் திருவீதி கள், தேர் நிறுத்துமிடம் மற்றும் இடையூராக உள்ள ஆக்கிர மிப்புகளை பார்வையிட்டு ஆலோசனை நடத்தினர்.



**மதுரை கலெக்டர் அலுலகத்தில் இருந்து சுற்றுலாத்துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்தும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகளுக்கு ஒரு நாள் கல்வி சுற்றுவாவை கலெக்டர் சங்கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார்.**




**தமிழ்நாடுமுதல்வரும்தி.மு.க.தலைவருமானமு.க.ஸ்டாலினின்72-வதுபிறந்தநாள்விழாவை முன்னிட்டு உசிலம்பட்டி நகர் சார்பில் முதல் கட்ட நிகழ்வாக கிராமிய கலைஞர்கள் 600 பேருக்கு கேஸ் அடுப்பு, வேஷ்டி, சட்டை, சேலை மற்றும் சிறப்பு ஊக்கத் தொகையினை மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார். உடன் உசிலம்பட்டி நகர் செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.**



**திண்டுக்கல் மேற்கு மாவட்டம் தொப்பம்பட்டி கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய பகுதிகளில் அ.தி.மு.க. பூத் கமிட்டி அமைத்தல் மற்றும் கட்சி வளர்ச்சி பணி குறித்தும், இளம் தலைமுறை விளையாட்டு வீரர்கள் அணிக்கான உறுப்பினர்கள் அதிக அளவில் சேர்க்கை தொடர்பான நிர்வாகிகள் உடனான அலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர்கள் கருப்புசாமி, முருகேசன் ஆகியோர் தலைமையிலும் விருதுநகர் தகவல் தொழில் நுட்ப பிரிவு மண்டல செயலாளர் சரவணகுமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், மாவட்ட பாசறை செயலாளர் சிவபாரதி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.**

# இளம் தலைமுறை விளையாட்டு அணி உறுப்பினர் படிவத்தை நகரச் செயலாளர் வழங்கினார்



**அருப்புக்கோட்டை, மார்ச் 27-**

அருப்புக்கோட்டையில் இளம் தலைமுறை விளை யாட்டு அணி உறுப்பினர் படிவங்களை வீரர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது.

விருதுநகர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ரவிச்சந்திரன் ஆலோசனை யின்படி அருப்புக்கோட்டை நகர அண்ணா திமுக செயலா ளர் சோலை .சேதுபதி இளம் தலைமுறை விளையாட்டு வீரர்கள் அணி உறுப்பினர் சேர்க்கை, படிவத்தை விளை யாட்டு வீரர்களுக்கு வழங்கி னார்கள்.

இந்நிகழ்ச்சியில் அ ண்ணா தொழிற்சங்க நிர் வாகி சித்தநாதன், விளை யாட்டு வீரர்களின் ஒருங்கி ணைப்பு குழு தலைவர் லெனின் வினோத் சிங், கிரிக் கெட் அணிகளின் கேப்டன் கள், வீரர்கள், கலந்து கொண் டனர்.

# நிலக்கோட்டை அருகே ஊருக்குள் செல்லாத பஸ்களுக்கு விதிமீறல் நோட்டீஸ்

## மோட்டார் வாகன ஆய்வாளர் நடவடிக்கை

**வத்தலகுண்டு, மார்ச் 27-**

திண்டுக்கல்லில் இருந்து மதுரை செல்லும் அரசு, தனி யார் பஸ்சுகள் அம்மையநா யக்கனூர், கொடைரோடு ஆகிய ஊருக்குள் சென்று வருவது வழக்கம். ஆனால் கடந்த சில வாரங்க ளாகவே பல பஸ்கள் ஊருக்குள் வரா மல், கொடைரோடுசுங்கச்சா வடியில் பயணிகளை இறக்கி விட்டதாககூறப்படு கிறது. இதனால் அம்மையநாயக்க னூர், கொடைரோடு சுற் றுவட்டார பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் இதுகுறித்துஅம்மையநாயக்க னூர் பொதுமக்கள், திண்டுக் கல் மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்த னர்.அதில், அனைத்து பஸ்க ளும்அம்மையநாயக்கனூர் ஊருக்குள் சென்று வரநடவ டிக்கை எடுக்க வேண்டும்என் றுகூறியிருந்தனர். இதைய டுத்து திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் சரவணன், அம் மைய நாயக்கனூர் வழியாக பஸ்சுகள் இயக்க வேண்டும் என்றும், இதுதொடர்பாக நட



வடிக்கை எடுக்க திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அதி காரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்பேரில் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலு வலர் கண்ணன் மேற்பார் வையில் வத்தலக்குண்டு மோட்டார் வாகன ஆய்வா ளர் ஜாஸ்மின் மற்றும் பணி யாளர்கள்நேற்று கொடைரோ டுஅருகேதிண்டுக்கல்-மதுரை நான்கு வழிச் சாலையில் உள்ள சடையாண்டிபுரம் பிரிவு பகுதியில் திடீர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது 6 பஸ்கள்அம்மை யநாயக்கனூர், கொடைரோடு ஆகிய ஊருக்குள் செல்லா மல் சென்றது தெரியவந்தது. இதையடுத்து அந்த பஸ் களை நிறுத்தி, விதிமுறைப் படி அம்மையநாயக்கனூர், கொடைரோடு ஊருக்குள் சென்று செல்ல வேண்டும் மோட்டார்வாகன ஆய்வா ளர் ஜாஸ்மின் அறிவுறுத்தி னார். மேலும் விதிமுறை களை மீறினால் கடும் நடவ டிக்கை எடுக்கப்படும் என் றும் எச்சரித்ததுடன், இரண்டு அரசு பேருந்துகள் நான்கு தனியார் பேருந்துகள் ஆக ஆறு பஸ்களுக்கும் விதிமீ றல் நோட்டீஸ் வழங்கினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி 2025-2026-ம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சித்துறை மற்றும் ஊராட்சித்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். அருகில் கூடுதல் தலைமைச்செயலாளர் ககன்தீப்சிங் பேடி, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் இரா.ஆனந்தகுமார், ஊராட்சித்துறை ஆணையர் பா.பொன்னையா ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் 2025-2026-ம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. அருகில் கைத்தறித்துறை செயலாளர் வே.அமுதவல்லி, கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி, துணிநூல் துறை இயக்குநர் இரா.வனிதா ஆகியோர் உள்ளனர்.



● சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சித்துறையின் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் சார்பில் நடைபெற்ற தமிழ் அகராதியியல் நாள் விழாவில் 2024-ம் ஆண்டுக்கான பல்வேறு விருதுகளை விருதாளர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ந.அருள், இயக்குநர் க.பவானி ஆகியோர் உடனிருந்தனர்.




● சென்னை எழிலகத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் 2025-2026-ம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள், பொது விநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் இயக்குநர்கள் அ.சண்முகசுந்தரம், த.மோகன் குடிமைப்பொருள் வழங்கல் தலைவர் ரூபேஷ்குமார் மீனா உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை உயர்த்துவது குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத்துறை இயக்குநர் த.அன்பழகன், கூடுதல் இயக்குநர் பி.பாலமுருகன், தனியார் சர்க்கரை ஆலைகளின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நடிகர் மனோஜ் உடல் தகனம்:

# முதல்வர்-துணை முதல்வர் அஞ்சலி

சென்னை, மார்ச் 27-

நடிகர் மனோஜ் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

தமிழ் திரையுலகின் புகழ் பெற்ற இயக்குனரான பாரதி ராஜாவின் மகன் மனோஜ். இவர் குடும்பத்துடன் சென்னை சேத்துப்பட்டில் வசித்து வந்தார்.

சமீபத்தில் மனோஜுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு மனோஜுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார். அவருக்கு வயது 48. மனோஜ் மறைவு திரையுலகிலும், ரசிகர்கள் மத்தியிலும் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மரணம் அடைந்த மனோஜ் உடல் நீலாங்கரையில் உள்ள வீட்டில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.



அரசியல் கட்சித் தலைவர்கள், திரை பிரபலங்கள் பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அந்த வகையில், நடிகர் மனோஜ் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின் மனோஜின் தந்தை பாரதிராஜாவின் கரங்களைப் பிடித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆறுதல் கூறினர்.

பின்னர் நேற்று மாலை அவரது உடல் பெசன்ட்நகர் மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அவரது மகள்கள் இருவரும் மனோஜின் உடலுக்கு இறுதி சடங்கினை செய்தனர். கண்ணீர் மல்க சடங்குகளை செய்த காட்சிகளை பார்த்த அனைவரும் கலங்கி நின்றனர்.

பாராதிராஜாவும் கனத்த இதயத்துடன் அவரது மகனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் உடல் தகனம் செய்யப்பட்டது.

# கிராமங்களில் ரூ.3,50 கோடியில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

வழங்கும் வகையில், பழுதடைந்த நிலையில் உள்ள 500 ஊராட்சி அலுவலகங்களுக்கு ரூ.157 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டப்படும். ஊரக பகுதிகளில் 500 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.87 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்படும். கிராமப்புற மக்கள் உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை எளிதில் கொண்டுசெல்லும் வகையில் ரூ.61 கோடி செலவில் 500 முழுநேர ரேஷன் கடைகள் கட்டப்படும்.

### இயற்கை-நீர்வள பணிகள்

புவி வெப்பம் அடைதலை தடுக்கவும் ஊரக பகுதிகளில் பசுமையை அதிகரிக்கவும் தொண்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து சாலையோரங்களில் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்படும். ஊரக பகுதிகளில் 500 அரசு பள்ளிகளில் ரூ.50 கோடியில் சுற்றுச்சுவர் கட்டப்படும். கிராமப்புற பகுதிகளில் இயற்கை மற்றும் நீர்வள ஆதாரத்தை பெருக்கவும், சமுதாய நிலங்களை மேம்படுத்தவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் புதிய குளங்கள் அமைக்கவும், மரக்கன்றுகள் நடவும் ரூ.500 கோடி மதிப்பீட்டில் இயற்கை மற்றும் நீர்வள பணிகள் மேற்கொள்ளப்படும்.

### உயர்மட்ட பாலங்கள்...

ஊரக பகுதிகளில் உள்ள மண் சாலைகள் ரூ.150 கோடி செலவில் ஓரடுக்கு கப்பி சாலைகளாக தரம் உயர்த்தப்படும். ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் ரூ.182 கோடி மதிப்பீட்டில் குழந்தை நேய வகுப்பறைகள் கட்டப்படும். ஊரக பகுதிகளில் ரூ.800 கோடி செலவில் உயர்மட்ட பாலங்கள் அமைக்கப்படும். மேலும், ரூ.300 கோடியில் புதிதாக 1200 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்படும். துப்புரவு பணியாளர்களின் நலப்பணிகளுக்காக துப்புரவு தொழிலாளர் நலவாரியத்துக்கு ரூ.5 கோடி வழங்கப்படும்.

### சுகாதார வளாகங்கள்...

ஊராட்சித்துறை மூலம் கட்டப்பட்டுள்ள பல்வேறு அலுவலகங்கள் மற்றும் பொது பயன்பாட்டு கட்டிடங்களை புனரமைத்து முறையாக பராமரிப்புக்க விரிவான கொள்கை வகுக்கப்படும். 2025-2025-ம் நிதி ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இதற்கு மாநில நிதிக்குழு மானியத்தில் இருந்து ரூ.100 கோடி ஒதுக்கப்படும். கிராமப்புறங்களில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் ரூ.3150 கோடி மதிப்பீட்டில் 1500 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டப்படும். மேற்கண்ட அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

# புதிதாக 72 காவல் நிலையங்கள்...(1-ம் பக்க தொடர்ச்சி)

வரையறுக்கப்பட்ட அளவுகோலின் படி 25 கிலோ மீட்டர் தொலைவுக்குள் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. அதாவது கிழக்கே 4 கிலோ மீட்டர் தொலைவில் அம்பத்தூர், மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் ஆவடி, வடக்கே 19 கிலோ மீட்டர் தொலைவில் செங்குன்றம், தெற்கே 8 கிலோ மீட்டர் தொலைவில் பூந்தமல்லி ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைந்துள்ளன.

இப்பகுதிகளில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகள் அருகிலுள்ள மேற்கண்ட 4 தீயணைப்பு நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஊர்திகளை கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால், அயம்பாக்கம் பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை. அது குறித்து பேசவேண்டும் என்று கையைத் தூக்கி உயர்த்திக்காட்டி பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களுக்கெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு சில புள்ளிவிவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற 2021-லிருந்து தமிழ்நாடு காவல் துறையில் பல்வேறு மாவட்டங்களில் இது வரை 72 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன. 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அறிவிக்கப்பட்டு அந்த 23 நிலையங்களும் திறந்துவைக்கப்பட்டு தற்போது செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தின் நிதிநிலைக்கேற்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை கனிவுடன் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு சாத்தியக்கூறு இருக்கக்கூடிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே, காவல் துறை மானியக் கோரிக்கை இந்த அவையிலே தாக்கல் செய்யப்படுகின்ற நேரத்தில் நிச்சயமாக நீங்கள் திருப்தி அடையக்கூடிய வகையில் சில அறிவிப்புகளும் வரும் என்பதையும் நான் உறுதியோடு தெரிவித்து அமைகிறேன்'' என்றார்.

# சென்னையில் நகைப்பறிப்பு கொள்ளையன் என்கவுன்டர் செய்யப்பட்டது எப்படி?

## காவல் ஆணையர் அருண் விளக்கம்

சென்னை, மார்ச் 27-

சென்னைக்கு விமானத்தில் வந்து நகைப் பறிப்பில் ஈடுபட்டு விமானம் மூலம் தப்பிச் செல்லவிருந்த வடமாநிலக் கொள்ளையர்களில் ஒருவர் என்கவுன்டர் செய்யப்பட்டது ஏன் என்பது குறித்து சென்னை காவல் ஆணையர் அருண் விளக்கம் கொடுத்துள்ளார்.

குற்றச்செயலில் பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டுவதற்காக, நேற்று அதிகாலை தரமணி ரயில்நிலையம் பகுதிக்கு கொள்ளையர்களைக் காவல்துறையினர் அழைத்துச் சென்றனர். அப்போது, ஈரானிய கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த வடமாநில கொள்ளையன் ஜாஃபர் இரானி (32) என்பவர் என்கவுன்டரில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இருவரும், ஈரானியக் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த கொள்ளையர்கள் என்பதும், மகாராஷ்டிர மாநிலம் தாணே அருகே உள்ள அம்பிவேலிப் பகுதியைச் சேர்ந்த அம்ஜத் இரானி (20), ஜாபர் இரானி (32) என்பதும், அவர்கள்தான் 6 இடங்களிலும் தங்கச் சங்கிலி பறித்தவர்கள். இவர்களில் ஜாபர் இராணி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து காவல்துறை ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தார். அவர் கூறியதாவது, சென்னையில் 6 இடங்களில் தங்கச் சங்கிலியைப் பறித்துவிட்டு மும்பை செல்வதற்காக விமானத்தில் செல்லத் தயாரான இருவரை கைது செய்தோம்.

மேலும், ரயிலில் தப்பிச் சென்ற ஒருவரை ஆந்திர மாநிலம் ஓங்கோலில் போலீஸார் கைது செய்தனர்.



● என்கவுன்ட்டரில் கொல்லப்பட்ட ஜாபர் மற்றும் கைது செய்யப்பட்டுள்ள சல்மான் மற்றும் மேசம்.

அவர்கள் குற்றச் செயலுக்குப் பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்ட தரமணி ரயில் நிலையம் அருகே அழைத்துச் சென்றோம். அப்போது அங்கே அவர்கள் பதுக்கி வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து காவல்துறையினர் மீது சுட்டனர். ஆனால் நல்வாய்ப்பாக காவல்துறையினருக்கு காயம் ஏற்படவில்லை. காவல் வாகனம் மீது குண்டுகள் பாய்ந்தன. தற்காப்புக்காக, காவல்துறையினர் சுட்டதில் ஜாபர் பலியானார் என்று தெரிவித்தார்.

மேலும் காவல்துறையினர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த காவல் ஆணையர் அருண், பறிக்கப்பட்ட செயின்களை பதுக்கி வைத்திருக்கும் இடத்தையும் இருசக்கர வாகனத்தையும் காட்டுவதற்காக ஜாபரை அழைத்துச் சென்றபோது இந்த என்கவுன்டர் நடத்தப்பட்டது.

சென்னையில் அடுத்தடுத்து 6 இடங்களில் செயின் பறிப்பில் ஈடுபட்டுள்ளனர். குற்றத்துக்குப் பயன்படுத்தியிருப்பது கர்நாடக பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் சென்றிருப்பது தெரியவந்துள்ளது. சென்னையில் நேற்று குற்றவாளிகளால் பறிக்கப்பட்ட செயின்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விமானத்துக்கு உள்ளிருந்துதான் ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டார். இவர்கள் மிகப்பெரிய கொள்ளை கும்பலைச் சேர்ந்தவர்கள். மோட்டார் பைக்கை பறிமுதல் செய்ய கைதானவர்களை அழைத்துச் சென்றபோதுதான் என்கவுன்டர் சம்பவம் நடந்தது.

கைதான இருவரும் தனித்தனியே விமானத்தில் சென்னை வந்து ஒன்றாக கொள்ளையடித்து விட்டு மீண்டும் தனித்தனியாக விமானத்தில் தப்புவது வழக்கம்.

இந்த வழக்கில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 26 சவரன் மதிப்புள்ள ஆறு செயின்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நேற்று முன்தினம் நடந்த செயின் பறிப்பில் ஒரு பெண் மணி கீழே விழுந்ததில் அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்.

ஈரானிய கொள்ளையர்கள் என்பது மும்பை சுற்றுவட்டாரப் பகுதியினர்தான். கைதான 3 பேரில் ஒருவர் முன்கூட்டியே தமிழகம் வந்து தேவையான ஏற்பாடுகளை செய்து விடுவார். சென்னையில் இந்த ஆண்டு நடந்த செயின் பறிப்பில் 7 இடங்களில் நடந்த திருட்டுச் சம்பவங்களை கண்டுபிடித்துவிட்டனர். கடந்த வருடம் 34 செயின் பறிப்பு நடந்துள்ளது. அதில் 33 வழக்குகளைக் கண்டுபிடித்துவிட்டோம். தனிப்படை காவல்துறையினர் ஈரானிய கொள்ளையர்களைத் தேடிச் செல்வார்கள்.

நேற்று முன்தினம் காலை 4.15 விமானத்தில் சென்னை வந்து இறங்கியிருக்கிறார்கள். உடனே இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு 6 மணிக்கெல்லாம் குற்றத்தில் ஈடுபடத் தொடங்கி, மீண்டும் காலை 10 மணிக்கெல்லாம் விமானத்தில் ஏறிவிட்டார்கள். காவல்துறையினர் எச்சரிக்கை கொடுக்கப்பட்டு ஆங்காங்கே சோதனையில் ஈடுபடத் தொடங்கியதைத் தொடர்ந்துதான், மிக விரைவாக குற்றத்தை முடித்துக் கொண்டு அவர்கள் சென்னையை விட்டுப் புறப்பட்டுள்ளனர்.

இந்த ஈரானிய கொள்ளையர்கள் மகாராஷ்டிர மாநிலம் அபிவேலி பகுதியில் இருகிறார்கள். இவர்கள் சென்னையை விட்டுத் தப்பிச் சென்றிருந்தால், அபிவேலிப் பகுதிக்குள் சென்று இவர்களைப் பிடிப்பது மிகவும் கஷ்டம். குற்றத்தில் ஈடுபட்டு விட்டு, உடைகளை மட்டும் மாற்றிக் கொண்டார்கள். ஷூவை மாற்றவில்லை அதை வைத்து எளிதாக அவர்களை அடையாளம் காண முடிந்ததாகவும் அருண் தெரிவித்துள்ளார்.